# எரிமலை

கலை கலாச்சார அரசியல் சமூக ஏடு ஜனவரி 1991



புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

ஏன் இப்படி?

இந்த இளைய மலர்கள்
ஏன் இப்படி?

அக்கினிக் குண்டத்தில்
தம்மை நிறுத்தி
ஏன் இந்தத் தீக்குளிப்பு?

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்




# எரிமலை

கலை கலாச்சார
அரசியல் சமூக ஏடு

பத்தாம் ஆண்டு

ஜனவரி 1991


## இனப்படுகொலையைத் தடுக்க யுத்தநிறுத்தம் வழிவகுக்குமா?

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமைப்பீடம், காலவரையறையற்ற, ஒருதலைப் பட்சமான யுத்த நிறுத்தம் ஒன்றை அறிவித்துள்ளது. இந்த யுத்தநிறுத்தம், டிசம்பர் 31 ம் திகதி நடுநிசியிலிருந்து, ஸ்ரீ லங்கா இராணுவத்தால் மீறப்படும்வரை கடைப்பிடிக்கப் படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த யுத்தநிறுத்தம், விடுதலைப் புலிகள் இராணுவரீதியில் பலம் பொருந்திய நிலையில் இருக்கும்போதே அறிவிக்கப்பட்டுள்ளது. மிகப் பெரிய மாங்குளம் இராணுவ முகாமின் வீழ்ச்சி, மிக உயர்ந்த பதவிகளை வகித்த இராணுவ, பொலிஸ் அதிகாரிக ளின் இறப்பு, எண்ணுக்கணக்கில்லாத பதுங்கித் தாக்குதல்களால் ஸ்ரீ லங்கா இராணு வம் பாரிய இழப்புக்களைச் சந்தித்து வருவது, எதிரியின் எல்லைக்குள் சென்று விடுதலைப் புலிகள் தாக்குதல்களை மேற்கொள்ளுவது, இராணுவ முகாம்களும், குடியேற்றங்களும் பாதுகாப்பற்றவையாக மாறிவருவது ஆகியவை அரச படைகளை தற்காப்பு (defensive position) நிலைக்குத் தள்ளிவரும் வேளையிலேயே இந்த யுத்த நிறுத்தம் பிரகடனப்படுத்தப்பட்டு அமுலுக்கு வருகின்றது.

யுத்த நிறுத்தம், ஸ்ரீ லங்கா அரசாங்கத்தாலும் பரஸ்பரம் கடைப்பிடிக்கப்பட்டு நீடித்தால், சமாதானப் பேச்சுவார்த்தையை ஸ்ரீ லங்கா அரசாங்கத்துடன் தொடங்கத் தயாராக இருப்பதாக விடுதலைப் புலிகளின் தலைமைப்பீட அறிக்கை கூறுகிறது. யுத்தம் என்ற போர்வையில் ஸ்ரீ லங்கா அரசு இனப்படுகொலையொன்றை நடத்திக் கொண்டிருக்கின்றது. தமிழ் மக்களுக்கு எல்லாவற்றையும் கொடுக்க விரும்பியதாகவும், விடுதலைப் புலிகளே பேச்சுவார்த்தையை குழப்பி யுத்தத்தை ஆரம்பித்து விட்டதாக வும், தனது பிரச்சாரத்தின் மூலம், இனப்படுகொலைக்கு நியாயம் கற்பித்து உலகை ஏமாற்றிக் கொண்டிருக்கின்றது ஸ்ரீ லங்கா அரசு.

எனவே பேச்சுவார்த்தையின் மூலம் பிரச்சனையைத் தீர்க்க ஸ்ரீ லங்கா அரசுக்கு. இன்னொரு சந்தர்ப்பத்தை கொடுப்பதன் மூலம் உலக நாடுகளின் அபிப்பிராய அழுத்தத்துடன் இனப்படுகொலையைத் தடுத்து நிறுத்தும் முயற்சியாகவே இது விளங்குகிறது. ஸ்ரீ லங்கா அரசாங்கம் தமிழீழ மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்து ஓர் அரசியல் தீர்வு காண உண்மையில் விரும்புகிறதா அல்லது போரை நடத்தும் சாட்டில் ஒரு இனப்படுகொலையை செய்ய விரும்புகிறதா என்பதை சர்வதேச சமூகத்தின் முன்னால் நிரூபிக்க வேண்டிய ராஜதந்திரச் செயற்பாடும், சர்வதேச சமூகத்தின் ஆதரவுடன் எமது விடுதலையை வென்றெடுக்கும் அவசியமும் போராட்டத்தின் இடையே கவனிக்கவேண்டிய கடமையாகின்றன.

போரினாலும், இனப்படுகொலையினாலும் மிகக் கொடூரமாகப் பாதிக்கப்பட்டுச் சொல்லொணாத் துன்பத்தை அனுபவித்து வரும் தமிழீழ மக்களுக்கு, குறிப்பாக தென் தமிழீழ மக்களுக்கு அவசர நிவாரண உதவிகளைச் செய்து அவர்களை பேரழிவிலி ருந்து பாதுகாப்பது முன்னுரிமை கொடுக்க வேண்டிய விடயமாகும். ஸ்ரீ லங்கா அரசாங்கம் தனது இனப்படுகொலைக்குக் கற்பிக்கும் போலி நியாயங்களை அகற்றி இனப்படுகொலையை முடிவுக்கு கொண்டுவருவதும், யுத்தநிறுத்தத்தின் வாயிலாக, சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களின் மூலம் நிவாரண வேலைகளைச் செய்து தமிழீழ மக்களின் வாழ்விற்கும், பாதுகாப்பிற்கும் உத்தரவாதமளிப்பதும் காலத்தின் தேவையாக உள்ளன. இந்த நோக்கங்களே, விடுதலைப் புலிகளின் தலைமைப்பீடம் யுத்த நிறுத்தத்தையும், பேச்சுவார்த்தைக்கான அறைகூவலையும் விடுக்கக் காரணமாக இருந்திருக்க வேண்டும்.

[redacted]


ஆக்கங்கள்,
அபிப்பிராயங்கள்
மற்றும் தொடர்புகட்கு:

எரிமலை
c/o C.C.T - France
341, Rue des Pyrenees
75020 Paris.
Tel: 43 58 11 42


www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்





## தமிழர் புனர்வாழ்வுக் கழகம்

யுத்தம் என்ற போர்வையில் திட்டமிட்ட இனப்படுகொலையொன்றை சிங்கள இனவெறிஅரசு தமிழ்மக்கள் மீது கட்டவிழ்த்து விட்டது.

இக்கொடூரமான, காட்டுமிராண்டித்தனமான சிங்கள வெறியினால் கிழக்குமாகாண மக்கள் விபரிக்க முடியாத அளவிற்கு, மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

எமது மக்களின் கண்ணீர்க் கதைகளை உலக நாடுகள் எதுவும் செவிமடுப்பதாய் இல்லை.

உயிர்வாழ்விற்காக எம்மக்கள் தவிப்பதை சர்வதேசமும் கண்டு கொள்ளாமல் அலட்சியப்படுத்துகின்றன.

உணவில்லை, உடையில்லை, உறையுள் இல்லை, பாதுகாப்பில்லை, அத்தியாவசிய மருத்துவ வசதிகள் இல்லை. இந்த நிலையில் கிழக்கு மாகாணத்தில் மக்கள் வாடிக்கொண்டிருக்கிறார்கள்.

சொல்லொணாத் துன்பத்தால் தினம் தினம் இறந்துகொண்டிருக்கின்ற எம்மக்களை, அந்தக் கொடுமையில் இருந்து மீட்க உலகத்திலுள்ள எந்தப் பொது அமைப்பும் பெரிதாய் அக்கறை கொள்ளவில்லை.

எமது மக்களை அரவணைத்து ஆசுவாசப்படுத்த எந்த ஒரு அரசும் முன்வரவில்லை.

எமக்கு நாமே ஆதாரமாய், ஆறுதலாய் ஆவதைத் தவிர வேறு வழியில்லை.

வெளிநாடுகளில் வாழுகின்ற எமது தேசமக்களே!

ஒரு கை தாருங்கள்! அங்கே வாடிக்கொண்டிருக்கின்ற எமது மக்களைத் துன்பக்கடலிலிருந்து கரையேற்றவேண்டும்.

ஒரு கை தாருங்கள்!

www.tamileelamarchive.com



# பிரபாகரன் தலை முறை

தோற்றம் ஒரு பார்வை

*" இந்த வயதில்*
*நாட்டுப்பற்றா "!*
*வியப்புக்குறிகளுக்குச் சொல்*
*தாயை நேசிக்க*
*மீசை தேவையில்லை !*
*( விடுதலைப் புலிகள் குரல் 17 1990 )*

ஆம். இது ஒரு நிதர்சனவடிவம். அன்னிய அடக்குமுறையின் கோரப்பிடியை உடைத்தெறிய போர்க்கொடி தூக்கிய புதிய பரம்பரை தரும் செய்தி. இன்று மேற்கத்தைய நாடுகளில் அடைக்கலம் புகுந்து எதிரிக்கு விசுவாசமாய் செயற்படும் தமிழ்க் கனவான்களுக்கும், அவர்களது எடுபிடிகளுக்கும் இன்றைய புதிய பரம்பரை கொடுத்துள்ள சாட்டையடி இது. அடக்குமுறைக்கு எதிராக ஆயுதம் தரிக்கும் தமிழீழ யதார்த்தத்தை கொச்சைப்படுத்தும் சிங்கள இனவாத அரசின் பிரச்சார எடுபிடிகளாக ஐரோப்பிய, அமெரிக்கக் கண்டங்களில் புத்திஜீவித்தனம் பேசும் பெரிய மனிதர்களுக்கு சிறுசுகள் பகரும் உண்மை இது.

இந்த உண்மையின் பின்னால் ஒரு பெரிய சமூக மாற்றமே தங்கியுள்ளது. ஆயுதம் தரித்த அடக்குமுறை எதிர்ப்பு போராட்டம் தமிழ்ச் சமூகத்தின் ஒவ்வொரு பழைமைவாதப் பிடிகளையும், அமைப்பு முறைகளையும் ஒரு உலுக்கு உலுக்கி புதியதொரு கட்டுமானத்திற்கான தயார்படுத்தலை உருவாக்கிக் கொடுத்துள்ளது. அடக்குமுறைகளுக்கு அடிபணியாத - அநியாயங்களை துணிந்து எதிர்க்கும் புரட்சிகர பரம்பரை ஒன்றின் தோற்றமே இப்புதிய கட்டுமானத்திற்கான அடிநாதமாகும். இதனையே நாம் எடுத்து இங்கு ஆராய்வோம்.

********

பிரித்தானிய காலனித்துவ ஆட்சி விட்டுச்சென்ற ஒற்றையாட்சிக்கு உட்பட்ட இலங்கைத்தீவு அதன் உள்ளடக்கத்தில் முரண்பட்ட பெரிதும், சிறிதுமான இரு தேசங்களின் மேல் வலிந்து கட்டப்பட்ட நாடாக விளங்கியது. சிங்கள பௌத்த இனவாதம் - தமிழர் எதிர்ப்பு உணர்வு என்பன பெரிய தேசத்தின் தலைமைக்கருத்தாக இருந்தது. தமிழர் தேசத்தில் பலாத்கார குடியேற்றத்திட்டம், மலையகத் தமிழ்மக்கள் மீதான வாக்குரிமை பறிப்பு, தனிச்சிங்களச் சட்டம், கலவரங்கள்...... இவ்வாறு பெரிய தேசத்தின் இனவாத ஆதிக்கப் போக்கு சிறிய தேசத்தின் கட்டமைப்பைத் தாக்கி அடக்குமுறை வடிவமாக உருவாகியது. இவ்வடக்குமுறைக்கு எதிரான போராட்டம் ஐம்பதுகளில் - அறுபதுகளில் சாத்வீகப் போராட்டங்களாக, எதிரிகளால் இலகுவாக நசுக்கக்கூடிய இலகுவான போராட்டங்களாக அமைந்திருந்தன. ஆனால் இந்த இயக்கப்போக்கு எழுபதுகளில் ஆயுதம் தரித்த இளைய தலைமுறையை உருவாக்கி, எண்பதுகளில் அவ் இளைய தலைமுறையின் வழிகாட்டலின்கீழ் முழுத் தமிழீழ சுதந்திரப்போராட்டத்தையும் உருவாக்கிக் கொடுத்தது. தொண்ணூறாம் ஆண்டு வலிமையான தமிழீழ தேசியவிடுதலைப் போராட்டத்தை வெளிக்காட்டுகின்றது. இந்த வரலாற்றுப்போக்கு இயல்பான அடக்குமுறை எதிர்ப்புப் போராட்டங்களுக்கே உரிய போக்காகும். எதுவித செயற்கையான புறத்திணிப்புகளும் இன்றி போர்க்களத்தில் உருவாகி போர்க்களத்தில் வளர்ச்சிகண்ட யதார்த்த வடிவமாகும். இந்த வரலாற்றுப் போக்கினூடு - வளர்ச்சி கண்ட விடுதலைப் போராட்டத்தினூடு - சமுதாயம் வளர்ச்சிகண்டது. நாநூறு ஆண்டுகால அடிமைஇருளில் தேசிய விடுதலை என்றால் என்ன - பொருளாதார அபிவிருத்தி என்றால் என்ன - கலாச்சார பண்பாட்டு வளர்ச்சிப் போக்கு என்றால் என்ன என்பதை சுயமாக தீர்மானிக்க முடியாத சமுதாயமாக தமிழீழ சமுதாயம் இருந்தது. இந்த நாநூறு ஆண்டுகால அடக்குமுறைக் காலம் தோற்றுவித்த அடிமை மனோபாவம் - அது சார்ந்த பொருளாதார, கலாச்சார பண்பாட்டு உந்துதல்கள் என்பனவற்றை மாற்றி

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



திடீரென ஒரே நாளில் புதிய விழிப்புப்பெற்ற, அரசியல் அறிவுபெற்ற புரட்சிகரப் பரம்பரையை உருவாக்குவதென்பது மேற்குலகில் வாழும் தமிழ்ப் புத்திஜீவிகளின் (?) புத்தகங்களில் வெளியிட ஏற்ற சிறுகதைகளால்த்தான் முடியும்.

இந்த மாற்றம் - அதாவது போத்துக்கேய, ஒல்லாந்த, பிரித்தானிய, சிங்கள ஆட்சியாளர்கள் தோற்றுவித்த அடிமை உணர்வை மாற்றுவதற்கான போராட்டம் - மிகக் கடுமையானதாகவே இருக்கும். யாழ்ப்பாண மேட்டுக்குடி - அதனது அரசியல் அபிலாசைகள் என்பனவே தமிழரது அரசியல் இலட்சியமாக "இராமநாதன்" காலத்தில் கருதப்பட்டது. அந்தக் காலத்திலிருந்து முழுத்தமிழ்பேசும் மக்களுக்கும் பூரணவிடுதலை - புதியதமிழீழ உருவாக்கமென " பிரபாகரன் " காலம் முடிவெடுக்கும் வரை மற்றுமொரு கடும் போராட்டம் இடம்பெற்றது. இவ்விரு போராட்டங்களும் அடிப்படையில் பிற்போக்கான தமிழீழ சமுதாயத்தை உடைத்து புரட்சிகர சமுதாயத்தின் தலைமையை உருவாக்குவதையே நோக்காகக் கொண்டுள்ளது.

அடிமை மனோபாவத்தை உடைப்பதென்றால் அந்த மனோபாவத்தை தாங்கிநிற்கும் பொருளாதார, அரசியல் வடிவம் உடைக்கப்பட வேண்டும். இந்தப் போராட்டத்தை தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆயுதம் தரித்த கெரில்லாப் போர்முறை மிகச் சிறப்பாக ஆற்றியது. எல்லைப்புறங்களின் எரியுண்ட கோலத்தையும் , பறிபோகும் நிலத்தையும் பற்றிய சேதியை முழு தமிழீழப் பிரதேசங்களுக்கும் காவிச் சென்று எதிரியை முழு மக்கள் முன்னும் நிறுத்தும் பணியை கெரில்லாப் போர் ஆற்றியது; இது முழு மக்களையும் செயற்படத் தூண்டியது; எதிரிக்கு எதிராக போராடும் உத்வேகத்தை கொடுத்தது; அடிமைத்தனம் என்றால் என்ன என்பதையும், தாம் எவ்வாறு ஆளப்படுகின்றோம் என்பதையும் நிஜமாக உணரும் மனோபாவத்தை கொடுத்தது; தேசம் பறிபோவதைத் தடுக்க வாக்குச்சீட்டில் புள்ளடி போட்டால் போதும் எனும் மனோநிலை மாற்றப்பட்டு காத்திரமாக செயல்ப்பட வேண்டிய தேவையைத் தூண்டியது. இந்தநிலைதான் மேட்டுக்குடிகளுக்கும், சாதாரண மக்களுக்கும் இடையிலான போராட்டத்தை சாதாரண மக்களுக்குச் சாதகமாகத் தீர்ப்பளித்தது.

போராட்டம் மக்கள்மயமாகியது. 80 - 90 க்கு இடைப்பட்ட காலம் முழு சமுதாயத்தையும் பரீட்சித்தது. பல்லாயிரம் போராளிகள் உருவாகினர். போராளிகளின் உருவாக்கம் என்பது சமூகத்தின்புதிய உணர்வை வெளிக்காட்டுகின்றது. மேட்டுக்குடிகளின் அடிமைத்தனமான கட்சி அமைப்புக்குள் உருவாகிய சாதாரண மக்கள் பரம்பரையிலிருந்தும் விடுபட்டு புதிய புரட்சிகர பரம்பரை உருவாகத் தொடங்கியது.

ஆக, இந்த புதிய பரம்பரை உருவாக்கம் என்பது சுதந்திரஉணர்வு நிரம்பப்பெற்ற, அடிமைத்தனத்தை எதிர்த்து நிற்கும் ஆற்றல்மிக்க இளைய தலைமுறையின் தோற்றத்தையே குறிப்பது ஆகும். இந்த இளைய தலைமுறை வயதில் இளையதாகவும் (ஏனெனில் பூரணமாக போராட்ட காலகட்டத்தில் வளர்ச்சி கண்டதால்), உறுதியானதாகவும், ஏமாற்றப்பட முடியாததாகவும் அமைந்துவிட்டது.

இங்கே அரசியல் அறிவு என்பது பிறந்து, தவழ்ந்து விளையாடிய மண்ணில் இரத்தம் சிதறிக்கிடப்பதால் புரியப்பட்டது. தமது தேசம் அன்னியரால் அடக்கி ஆளப்படுகின்றது - அதனை மீட்க ஆயுதம் தரித்த போராட்டம் ஒன்று கருக்கொண்டுள்ளது என புரிந்துகொண்ட இளைய தலைமுறை அடக்குமுறையாளர்களின் தொடர்ச்சியான பாதிப்புகளால் தம்மை போராட்டத்துடன் இணைத்துக்கொள்கின்றது. ஆக, அடக்குமுறைக்கு எதிரான போராட்டம் என்ற அளவில் போராட்டத்தை புரிய ஆரம்பிக்கும் இளைய தலைமுறை போர்க்களத்தில் அரசியல் பயிற்றுவிக்கப்பட்டு- மக்கள் மத்தியில் கடமை புரியும்போது அரசியல் அனுபவம் பெற்று வளர்ச்சி காண்கின்றது.

இதுதான் தோற்றம் கண்ட பிரபாகரன் பரம்பரையின் போக்கு. இந்தப் புரட்சிகர போக்கினைக் கொச்சைப் படுத்தும் எதிரியும் - மேற்குலகம் வாழ் தமிழ் கனவான்களும் பொல்லாத கயமை நோக்கங்களைக் கொண்டுள்ளனர்.

இளைய தலைமுறையின் போராட்டத்தை கொச்சைப் படுத்தும் தமிழ் கனவான்கள் அடிப்படையில் யாழ். மேட்டுக்குடி சார்ந்தவர்களாகவும் போராட்டத்தை " புத்திஜீவித்தன நோக்கு " என்ற போர்வையில் தமது அதிகாரத்தினுள் - அல்லது தமது எண்ணத்திற்கு ஏற்ப இயங்கவைக்கவும் முயல்பவர்கள். இவர்களது கனவுகள் பிரபாகரன் சந்ததியைப் பொறுத்தவரை

www.tamileelamarchive.com



எட்டாத கனியாகப் போய் விட்டது. புதிய தலைமுறை வாய்வீச்சும், போலித்தனமும் கொண்ட "கனவுகளை" நாடுவதே இல்லை.

எதிரியை அதாவது சிங்கள இனவாத அமைப்பைப் பொறுத்தவரை போராளிகள் விட்டுக் கொடுக்கத் தயாரில்லாத - உறுதியான சக்தியாகத் திகழ்வதற்கு இளைய தலைமுறையின் பங்களிப்பே காரணம் எனக் கருதுகின்றது. மூத்த தலைமுறை போன்று சலனம் நிறைந்த, சாந்த சொரூபிகளை எதிரி விரும்புகின்றான்; பேசி ஏமாற்றிவிடலாம் என்ற நம்பிக்கையுடன்.

ஆக, தமிழீழ போராட்டத்தை - அதனது புரட்சிகர வடிவத்தை - புதிய தலைமுறையின் தோற்றம் செழுமைப்படுத்துகின்றது. இன்றைய விடுதலைப் புலிகளின் பிராந்தியத் தளபதிகள் - தலைவர்கள் - தினசரி இணையும் பல்லாயிரம் புதிய தோழர்கள் அனைவரும் புதிய தலைமுறையின் வெளிப்பாடுகளே. இவர்களை ஏமாற்ற முடியாது! தோற்கடிக்க முடியாது!

*** ***

~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~
~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~

யாழ்ப்பாணம், அத்தியடியைச் சேர்ந்த இரத்தினம் என்ற பதின்நான்கு வயதுச் சிறுவன் விடுதலைப் புலிகள் இயக்கத்தில் சேருவதற்காக வீட்டில் இரண்டு தினங்கள் மௌனவிரதம் மேற்கொண்டான். அவனது உறுதியை குலைக்க முடியாதென்பதை உணர்ந்து கொண்ட அவனது பெற்றோர், அவனை விடுதலைப் புலிகளிடம் ஒப்படைத்தனர்.

- ஈழநாடு 24.07.1990 -

www.tamileelamarchive.com

# வின்சன்ட் வான்கோ - ஓவியமேதை

உலகின் தலைசிறந்த சித்திரக் கலைஞர்களுள் ஒருவர். ஒல்லாந்து நாட்டைச் சேர்ந்தவர். 1853 ம் ஆண்டில் பிறந்த இவர் பள்ளிப்படிப்பை முடிக்காமலே கலை வாழ்க்கையை ஆரம்பித்தார். அவர் தனது 37 ம் வயதில் 1890 ம் ஆண்டு இறந்து போனார். மனப் போராட்டங்களோடு வாழ்ந்த அம்மேதையின் மரணத்தின் பின்னரே அவரது கலைப்படைப்புகளின் உன்னத மகிமையை உலகம் புரிந்துகொண்டது. தன்னைத் தானே நெஞ்சில் சுட்டு இறந்து போனதையும், தனது காதினை சவரக்கத்தியால் அறுத்துக் கொண்டதையும், ஒரு வருடகாலம் மனநோயால் வைத்தியசாலையில் கழித்ததையும் - மன உளைச்சலின் - தேடலின் விளைவாகத்தான் கருதமுடியும். இம்பிரஷனிஷ்ட் - சித்திரக் கலைஞராகவே - இவரை நாம் இனங்காண முடியும்.

ஒல்லாந்தின் தலைநகரான அம்ஸ்ரடாமில் வான்கோவின் ஓவியக் களஞ்சியச்சாலை அமைந்துள்ளது. அங்கு நுழையும் போது எளிமையும், பரிசுத்தமும், பிரமிப்பும் உள்ளத்தை ஊடுருவுவதைத் தடுக்கமுடியாது. சில சித்திரங்கள் வாழ்க்கையின் போராட்டத்தை சித்தரிப்பதாக அமைந்துள்ளன. " ஒலிவ் மரங்கள் " என்று தலைப்பிடப்பட்ட சித்திரம் சோக ரசத்தை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது.

பெரும்பாலான சித்திரங்கள் - இயற்கைக் காட்சிகளை நேருக்குநேர் நின்று வரைந்ததாக உள்ளன. - போட்டோப் பிரதிகளோடு அவற்றை ஒப்பிடும்போது - மிக நுணுக்கமான பரிமாணங்களோடு வரையப்பட்டுள்ளதாகச் சொல்லப்படுகிறது.

சித்திரங்களை வடிக்கும் போது - பல்வேறு அழுத்தங்களைக் கொடுத்து - அதன் தீவிரத்தை அதிகரித்துள்ளது புலப்படுகிறது. சித்திரம் சொல்லுகின்ற செய்திக்கு அழுத்தம் கொடுக்க பல்வேறு உத்திகளை அவர் கையாண்டுள்ளார்.

நிற முரண்பாடு:- முரண்பட்ட நிறங்களை பயன்படுத்தி உள்ளார். பளிச்சென்ற , கடுமையான நிறங்கள் மூலம் சித்திரத்தின் தீவிரத்தை அதிகரித்துள்ளார்.

தூரிகை வீச்சு:- தூரிகையின் வீச்சான இழுவைகளால் அழுத்தத்தை வெளிக்கொணர்ந்துள்ளார்.

ஆவியால் பீடிக்கப்பட்டவன் போல் கலை ஆவேசத்தோடு சித்திரங்கள் வரையப்பட்டுள்ளது தெள்ளென புலனாகிறது. சுயமான வெறியினால் எழுந்த உயிர்த் துடிப்பை, வேகத்தை இவரது சித்திரங்களில் தரிசிக்கலாம்.

இவரது சித்திரங்களை, இயற்கைக் காட்சிகள், வாழ்க்கைப்படப்பிடிப்புகள், சுயசித்திரங்கள் என்று வரையறுக்கலாம்.

இயற்கைக் காட்சியில் இயற்கையின் சுழற்சியை, 4 கால மாற்றங்களை வெளிப்படுத்தி உள்ளார். வசந்தத்தில் மலர்கள் பூத்துக் குலுங்கும் சோலைகளையும், கோடையில் வயலில் அறுவடைசெய்யும் காட்சிகளையும், இலையுதிர் - இலைதுளிர் காலங்களில் பல்வேறு இயற்கையின் தோற்றப்பாடுகளையும் தனது சித்திரங்களில் வரைந்துள்ளார்.

சாதாரண விவசாய மக்களின் வாழ்க்கையை தனது சித்திரங்களில் வெளிப்படுத்தியதே இவரது தனிப்பட்ட சிறப்பாகும். விவசாயிகளின் வாழ்க்கையை வர்ண சித்திரங்களில் வெளிப்படுத்தும் சிறந்த கலைஞனாகவே அவர் வர விரும்பினார். அவர்களது வாழ்க்கை மீது கழிவிரக்கம் கொண்டார். "இலையுதிர் கால இலைகள் போல இம்மக்கள் யாருக்கும் தெரியாமல் இறந்து போவதா?" என்று தனது தமையன் தியோவுக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். சவக்காலைக் கோவில்களில் வளர்ந்து பூத்து மடியும் சிறு புல் பூண்டுகளைப் போன்றது அவர்களது வாழ்க்கையென்று குறிப்பிட்டுள்ளார்.

விவசாயிகள், நூல்நூற்போர், விறகுவெட்டுவோர், கொல்லத்தொழில் செய்வோர் என்று பல்வேறுபட்ட விவசாய - தொழிலாள மக்களைத் தத்ரூபமாக - அழுத்தமாக - உணர்வு வெளிப்பாட்டுடன் சித்திரமாகத் தீட்டியிருந்தார். அவர்களுக்காக வாழுவதை புதிய மதமாகவே கருதினார். அவரது மதத்துக்கான கருப்பொருளாக வேதாந்தத்தை நாடவில்லை. ஒவ்வொரு நாளும் தங்கள் வேலைகளைச் செய்து வரும்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



எளிமையான அந்த கிராம மக்களை தனது சித்திரங்களில் வரைவதே தனது வேதம் எனக்கொண்டார். இங்கு ஒரு புதிய வேதம் எழுதப்படுவதைக் காணலாம்.

சூரியகாந்திப் பூக்கள் போன்ற - அசைவற்ற பொருட்களையும் நிறைய வரைந்துள்ளார். சூரியகாந்திப் பூக்கள் - உலகப்புகழ் பெற்றது. வீடுகளுக்கான சோடனைகளுக்காகவென்றே - இத்தகைய சித்திரங்கள் வரையப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.


'மொடல்களை வைத்தே பெரும்பாலான உருவச் சித்திரங்கள் வரையப்பட்டன. தனது கற்பனையை ஓடவிடும் தன்மையும் தன்னெழுச்சியான (Spontaneity) தன்மையும் அவரது சித்திரங்களில் இழையோடின சுய சித்திரங்கள் பலவற்றை அவர் தீட்டியுள்ளார். தன்னையே வரைந்துள்ள ஒரு சித்திரம் நிறமுரண்பாட்டினாலும் தூரிகையின் வீச்சான இழுவைகளாலும் மிகவும் தீவிரத் தன்மை பெற்றுக் காணப்படுகிறது.



வான்கோ

இவரது சித்திரங்கள் தரும் செய்தியும், நுட்ப வெளிப்பாடும், வண்ணக் கலவையின் ஆயாசமான ஆதிக்கமும் - உலகின் முன்னணிச் சித்திரக் கலைஞனாக வான்கோவை என்றும் நிலைநிறுத்தி வைத்திருக்கின்றன. பல கோடிக்கணக்கான மக்களுக்கு எழுச்சியைத் தூண்டுதலை அளிக்கும் சக்தியாகவும் அவரது சித்திரங்கள் விளங்குகின்றன.

## டயலாக்



சிகையலங்கரிப்பு நிலையமொன்றில் தலைக்கு 'டை' அடிக்கவந்த ஒருபடித்தவரும் சுமாராய் படித்த ஒரு இளைஞனும்.

படிச்சவர்: நாய்ப்பயலுகள் உவங்கள் உப்பிடி எண்ணிக்கையில்லாமல் சுட்டுத்தள்ளுறாங்கள். ஒருமனிசரோட தலைநிமிர்ந்து கதைக்கேலாமல் எல்லேல பண்ணிட்டாங்கள்.

இளைஞன்: என்ன மாஸ்ரர் நீங்களும் அறிவில்லாமல்..... நாங்கள் தமிழுங்களெண்டு நெஞ்சநிமித்திக் கதைக்கிற காலம் இப்பத்தானே வந்திருக்கு. அங்க தலைபோற பிரச்சனைக்க அவங்கள் நிக்கேக்க, இங்க நீங்க என்னடாவெண்டால் தலைநிமிர்ந்து கதைக்க பொடியள் தடையெண்டுறியள். உங்கட தலைநிமிர்ந்துதான் என்ன. என்னகவிண்டால்தான் என்ன. பேசாமல் 'டை' அடிச்சிட்டுப் போவீங்களா.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



# தமிழீழ சுதந்திரத்திற்கான சர்வதேச அங்கீகாரம்

ஐ.நா.சபையின், பாகுபாட்டைத் தடுத்தலும், சிறுபான்மையினரைப் பாதுகாத்தலுக்குமான உபகொமிஷனின் 42 வது கூட்டத்தொடர் சுவிற்சலாந்து நாட்டில், ஜெனீவா நகரில் ஆகஸ்டு மாதம் 6 ம் திகதியிலிருந்து 31 ம் திகதி வரை இடம்பெற்றது. இதில் 26 நாடுகளைச் சேர்ந்த, மனித உரிமைகள் தொடர்பான சட்ட வல்லுனர்கள் கலந்து கொண்டனர். 89 நாடுகளின் பிரதிநிதிகள் பார்வையாளர்களாகக் கலந்து கொண்டனர். மேலும் ஐ.நா.சபையின் பல்வேறு அமைப்புக்களைச் சேர்ந்த பிரதிநிதிகளும், விடுதலை அமைப்புக்களைச் சேர்ந்த பிரதிநிதிகளும், பல்வேறு நாடுகளைக் கூட்டிணைத்த அமைப்புக்களின் பிரதிநிதிகளும் பங்கேற்றனர்.

மேலும் 91 அரச சார்பில்லாத அமைப்புக்களும் உப கொமிஷனுக்கு தமது பிரதிநிதிகளை அனுப்பியிருந்தன. லிபரேஷன் என்ற அமைப்பின் பேரில் எஸ். கேசவன், எல். கிறிஸ்ரியன், என். சத்தியேந்திரா ஆகியோரும் சர்வதேச கல்வி அமைப்பின் பேரில் அன்ரன் பொன்ராஜா, வேக்லி போல் ஆகியோரும் கலந்து கொண்டனர். இவர்கள் உத்தியோகபூர்வமற்ற முறையில் தமிழீழத்தை பிரதிநிதித்துவப்படுத்தினார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. உப கொமிஷனில் சட்ட வல்லுனர்களினதும், அரச சார்பற்ற அமைப்புக்களினதும் செயற்பாடே முக்கியமானவை என்பது கவனிக்கத்தக்கது. மனித உரிமைகளை மீறும் அரசாங்கங்களைக் கண்டிக்கவோ, அவற்றை விசாரிப்பதற்காக விசேட விசாரணையாளர்களை அனுப்புமாறு ஐ.நா.சபை மனித உரிமைகள் கொமிஷனுக்கு சிறப்புரை செய்யவோ உபகொமிஷனுக்கு அதிகாரம் உண்டு.

26 நாடுகளைச் சேர்ந்த சட்ட வல்லுனர்கள் அளிக்கின்ற இரகசிய வாக்கெடுப்பின் மூலம் தீர்மானங்கள் நிறைவேற்றப்படுகின்றன. வல்லுனர்கள் மனித உரிமை மீறல்கள் தொடர்பான ஆய்வுரைகளை வாசிப்பதும், விவாதிப்பதும் முக்கிய செயற்பாடாக உள்ளது. மேலும் அரச சார்பற்ற அமைப்புக்கள் மனித உரிமை மீறல்கள் குறித்து, அரசாங்கங்களைக் கண்டித்து அறிக்கைகள் வாசிக்கலாம். தம்மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் குறித்துப் பதிலளிக்க பார்வையாளர்களாகக் கலந்து கொள்ளும் ஒவ்வொரு நாட்டின் பிரதிநிதிகளுக்கும் சந்தர்ப்பம் அளிக்கப்படும். காணாமல் போதல், தடுத்து வைத்தல், இரசாயனக் குண்டுகளைப் பயன்படுத்தல், சித்திரவதை போன்ற பல்வேறு மனித உரிமை மீறல்களுடன், யுத்தத்தில் கடைப்பிடிக்கவேண்டிய மனிதாயத சட்டங்கள், சிறுபான்மையினரது உரிமைகள், சுயநிர்ணய உரிமை ஆகியனவும் விடயங்களாக உள்ளன.

## சிறீலங்காவிற்கு ஆயுதத்தடை

சிறீலங்காவில் நடக்கும் இனப்பிரச்சனைகளை தொடர்ந்து மூன்று பொதுநல அமைப்பு நாடுகளான அவுஸ்திரேலியா, பிரித்தானியா, கனடா ஆகியவை சிறீலங்காவிற்கு ஆயுதங்களையும், வெடிமருந்துகளையும் ஏற்றுமதி செய்வதை தடைசெய்துள்ளன.

உள்நாட்டுப் பிரச்சனைகள் உள்ள நாடுகளுக்கு ஆயுதங்கள் ஏற்றுமதி செய்வதை தமது நாடு கண்டிப்பாக மறுப்பதாகவும், சிறீலங்காவிற்கு தடைசெய்யப்பட்டுள்ள ஆயுத ஏற்றுமதி குறித்த தமது முடிவை மீள் பரிசீலனை செய்யமுடியாது எனவும், அவுஸ்திரேலியாவின் வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் திரு. காரத் இவான்ஸ் தெரிவித்துள்ளார்.

' சகல பாதுகாப்பிற்கான விற்பனைகளும், இராணுவப் பயிற்சியும் ஒரு நாட்டிற்கு வழங்கப்படுமுன்னர், அந்த நாட்டின் மனித உரிமைகள் பற்றிய நடவடிக்கைகளும் கவனிக்கப்படும் பலவிடயங்களுள் ஒன்றாகும்.' என பிரித்தானிய பாதுகாப்பமைச்சின் பேச்சாளர் ஒருவர் கூறினார். உள்நாட்டு அடக்குமுறைகளிற்கு பாவிப்பதற்கான உபகரணங்களை விற்பனை செய்வதையோ, ராணுவப்பயிற்சி அளிப்பதனையோ அமைச்சு அனுமதிக்காது எனவும் அவர் தெரிவித்தார்.

www.tamileelamarchive.com

தமிழீழ மக்களின் சுயநிர்ணய உரிமை 18 அரச சார்பற்ற அமைப்புகளால் சமர்பிக்கப்பட்ட கூட்டறிக்கையில் வலியுறுத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது. இலங்கையரசின் மனித உரிமை மீறல்களைப் பற்றியும் தமிழீழ மக்களின் சுயநிர்ணய உரிமை பற்றியும் பல்வேறு சர்வதேச அமைப்புகளின் பிரதிநிதிகள் அறிக்கைகள் வாசித்துள்ளனர்.

18 மனித உரிமை அமைப்புகள் தமிழீழ மக்களின் தேசிய சுயநிர்ணய உரிமைக்கு கூட்டான ஆதரவு வழங்கியது மிக முக்கியமான நிகழ்ச்சியாகும். மனித உரிமைகளும் அடிப்படைச் சுதந்திரங்களும் என்ற விடயத்தின் கீழ் இவ்வறிக்கை வாசிக்கப்பட்டது. பல்வேறு நாடுகளுக்குள் இருக்கும் தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையைக் குறித்து ஏராளமான அமைப்புகள் கருத்து வெளியிட்டதானது, தேசிய இனங்களின் விடுதலையை ஐ.நா.சபை போன்ற சர்வதேச அமைப்புகள், சர்வதேச சட்ட ரீதியில் அங்கீகரிப்பதற்கு கட்டியம் கூறும் நிகழ்ச்சியாக அமைந்திருந்தது. 90ம் ஆண்டுகள் தேசிய இனங்களின் விடுதலையாண்டுகளாக மிளிரும் என்பதை பறைசாற்றுவதாகவும் அச்செயற்பாடு காணப்பபட்டது. ஏனெனில் நாடுகளின் கூட்டமைப்பான ஐ.நா.சபையோ அல்லது சர்வதேச சட்டங்களோ நாட்டினுள்ளே உள்ள தேசிய இனங்கள் தமது சுயநிர்ணய உரிமையைப் பிரயோகிப்பது குறித்து இன்னுமொரு தெளிவான நிலைப்பாட்டை எடுக்கவில்லை. அத்தகைய நிலைப்பாட்டை எடுப்பதற்கு சரியான கருத்துருவத்தை ஏற்படுத்தும் ஒரு முன்னெடுப்பாகவும், முன்னோடிச் செயலாகவும் அரச சார்பற்ற சர்வதேச அமைப்புகள் தமிழீழ மக்களின் சுயநிர்ணய உரிமைபற்றிக் கூட்டாக வெளியிட்ட அறிக்கை அமைந்திருந்தது.

அக்கூட்டறிக்கை, இலங்கையில் தொடர்ச்சியாகவும், பாரியஅளவிலும் நடைபெறும் மனிதஉரிமை மீறல்கள் குறித்து ஏராளமான மனிதஉரிமை அமைப்புகள் கண்டனத்தை வெளிப்படுத்தியுள்ளதைச் சுட்டிக்காட்டியது. மேலும் தமிழ் மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் மனிதஉரிமைகளின் அடிப்படையிலும், சுயநிர்ணய உரிமையின் அடிப்படையிலும் முன்னெடுப்புக்களை இலங்கைஅரசு மேற்கொள்ள வேண்டும் என்றும் கோரியது. தமிழ்மக்களின் குடியிருப்புக்கள் மீது குண்டுகள் வீசப்படுவதையும், இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் நூற்றுக்கணக்கான தமிழர்கள் "காணாமல்" போவதையும் அவ்வறிக்கை கண்டித்துள்ளது. இலங்கை இராணுவம் தமிழ், முஸ்லீம், சிங்களப் பொதுமக்களை கண்டபடி கொலை புரிதலையும், யாழ் குடாநாட்டிலிருந்து முழுச்சனத்தொகையான பத்து இலட்சத்திற்கும் மேற்பட்ட தமிழ் மக்களை அகதி முகாம்களுக்கு அப்புறப்படுத்தும் இலங்கை அரசின் ஆணையையும் இவ்வறிக்கை வன்மையாகக் கண்டித்துள்ளது. ஆயுத மோதலில் ஈடுபடும் அனைத்துத் தரப்பினரும் சர்வதேசச் சட்டவிதிகளுக்கு அமைந்து நடக்குமாறும், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், அது போன்ற வேறு சர்வதேச அமைப்புகள் தங்கள் கடப்பாடுகளைச் செய்வதற்கு அனுமதிக்குமாறும் அவ்வறிக்கை வேண்டுகோள் விடுத்துள்ளது.

சிறீலங்காவிற்கும் - விடுதலைப் புலிகளுக்குமான போரில் ஏற்படும் பொதுமக்கள் இழப்பைக் கருத்தில் கொண்டு சிறீலங்காவிற்கு ஆயுதங்கள் ஏற்றுமதி செய்வதை தாம் தவிர்ப்பதாக கனேடிய அரசு தெரிவித்துள்ளது.

ஒன்ராரியோவில் உள்ள உலகத் தமிழர் இயக்கத்திற்கு எழுதிய கடிதத்தில் பொதுமக்களின் இழப்பையும், இடப்பெயர்ச்சியையும், உணவு, மருந்துத் தட்டுப்பாடுகளையும் தாம் கவனத்தில் எடுத்துக் கொண்டுள்ளதாக கனேடிய வெளிநாட்டலுவல்கள் அமைச்சு தெரிவித்துள்ளது.

பொதுமக்களின் உரிமைகளையும், பாதுகாப்பையும் கவனத்தில் கொள்ளுமாறு சிறீலங்காஅரசையும், விடுதலைப் புலிகளையும் கனேடிய அரசு கேட்டுள்ளது. நெருக்கடியிலுள்ள இருபகுதியினரையும், தமிழர்களின் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய வகையில், தமிழர்களின் பாதுகாப்பைக் கருத்திற்கொண்டு நிரந்தரமான நீண்டகாலத் தீர்வை பேச்சுவார்த்தையின்மூலம் கண்டு கொள்ளுமாறு கேட்டுள்ளது.

தற்போதுள்ள நிலைமையைக் கருத்திற்கொண்டு தாக்குதல்களுக்கான உபகரணங்களான ஆயுதங்களும், வெடிமருந்துகளும் சிறீலங்காவிற்கு ஏற்றுமதி செய்வது தடைசெய்யப்பட்டுள்ளதாக அக்கடிதம் தெரிவித்துள்ளது.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்





# நிழலல்ல நிஜம்

ஊரசி

மகுடியார் மகுடியை வாயில் வைத்து வளைந்து நெளிந்து ஊதுவார்; பற்கள் பிடுங் கப்பட்ட நல்ல பாம்புகள் மகுடியின் போக் கிற்கு ஏற்பவும், இசையின் அதிர்வுக்கு ஏற் பவும் படமெடுத்து வளைந்து நெளிந்து ஆடும். சனங்கள் பயம் ஏதும் இன்றி அரு கில் நின்று வேடிக்கை பார்ப்பார்கள். ஆனால் கொடிய விசப்பாம்புகள் தலைக் கொரு மகுடியை எடுத்து மூச்சுப்பிடித்து ஊதித்தள்ள , மகுடியார் கிறுக்குப்பிடித்து அங்கும் இங்கும் நெளிந்து சுருண்டு, எம்பிக் குதித்து ஆடிக்களைத்தால் எப்படி இருக் கும்?.... அகோரமாய் இருக்கும். சனங்கள் ஆரும் நிண்டு பாக்குங்களே? மூளையுள் ளதுகள் அந்த ஏரியாவிலயே நில்லாதுகள்.

காலங்கள் மாறுகின்ற போது காட்சிகளும் மாறும். நிலைமைக்கு ஏற்ப அரிதாரம் பூசிக் கொண்டு பழைய முகங்கள் புதிய முகங்க ளாய் வெளிப்படும். மக்களின் அரசியல் தலைவிதி பற்றிப் பேசிப்பேசிவாழ்க்கை ஓட்டியவையள் இப்ப இலக்கிய சஞ்சாரத் திலோ, அல்லது வேறு டேஞ்சர் இல்லாத பீல்டிலயோ இறங்கிவிடுவினம். நாலுவிச யத்தை நாலுவிதமாக் கதைக்கக்கூடிய ஒரு புள்ளியை முன்னிலைப்படுத்தி உரும றைப்பு உருவில் தயாராகி விடுவார்கள். மக்களின் அறிவை அரைகுறைவாய் மதிப் பிட்டுக் கொண்டு மக்கள் சபைக்கு வரத்தெ ண்டிப்பினம். ஆளுக்கொரு சல்லாரியையும் சிஞ்சாக்களையும் தூக்கிக்கொண்டு, தார தம்பட்டம் அடித்துக்கொண்டு தெருவிற்கு வந்துவிடுவினம் கல்யாண ஊர்வலம் மாதிரி. சனத்தின்ர பார்வைக்கு பிரேத ஊர்வலம் மாதிரித்தான் இருக்கும்; ஒரு சவத்தை நாலுபேர் தூக்கிக்கொண்டு வாறமாதிரித் தான் இருக்கும்.

உவங்களை எங்கட சனங்கள் என்னண்டு மறக்குங்கள்; இவ்வளவு அநியாயங்கள், அட் டூழியங்கள் அங்க நடக்கேக்க இங்க அதை நியாயப்படுத்தின ஆக்களெல்லே. இந்தியன் ஆமியும், சிங்கள ஆமியும் தமிழ்மக்களை வேட்டையாடேக்க வெள்ளக்காரன் எழு திற மாதிரி எல்லாம் முறிஞ்சு போட்டுது எண்டு சந்தோசத்தில புத்தகம் விட்ட ஆக் களெல்லே.உவங்களைச் சனங்கள் மறக் குமே. மறக்கக்கூடிய முகங்களா? உவங்க ளும் விசயம் விளங்காமல் சனத்தோட ஒளிச்சுப்பிடிச்சு விளையாடவெல்லே திரி யிறாங்கள்.

அண்மையில இப்படித்தான் இங்க ஒன்றிர ண்டு இலக்கியத் தலைசுத்துக்கள் மேடை யேறின. அரசியல் கதைச்சு ஓய்ஞ்சு போனவை ஒண்டாய்ச் சேர்ந்து இலக்கியங் களை அவசரமாய் அலசவேணும்மெண்டு கூடிச்சினம்.

தவிட்டு யாவாரம் செய்து நட்டப்பட்டவன் வைக்கோல் யாவாரம் செய்யிறதில் லையா........ அதுமாதிரி. சனத்தை மிருகசாதி மாதிரித்தானே நினைக்கிறாங்கள். எதை யெண்டாலும் எறிஞ்சு சனத்தை மடக்கிப் போடவேணும் எண்டுதானே பாக்கிறாங் கள்.

கூட்டத்தை நடத்தியவர் சற்றுப் பிரபலமான புள்ளி. படிச்சவர்; நாலுபேருக்குப் படிப்பிச் சவர். கன பொடியளுக்கு அரசியல் படிப் பிச்சு களத்துக்கு அனுப்பி சண்டைபிடிக்க வைச்சிட்டு இந்தியாவில நிண்டு கொண்டு பதவிவேணும் எண்டு சண்டைபிடிச்சவர்.

www.tamileelamarchive.com

யூனிவசிற்றியில படிச்சாக்களாலதான் இயக்கத்தைக் கொண்டுநடத்தமுடியுமெண்டு ஒற்றக்காலிலயெல்லே நிண்டவர்; புலுடா சரிவரயில்ல... மாஸ்ரர் கடல் தாண்டிக் கம்பி நீட்டிட்டார்.

கூட்டணிக்காரரும் இதுமாதிரித்தானே; மேடைமேடையா ஏறி தொண்டை கிழியப் பேசி, கண்ணெல்லாம் சிவக்க விடுதலை வெறி வந்தமாதிரி நடிச்சுக்காட்டி, சிங்கள வெறியங்களுக்கு சுட்டுவிரலை நிமிர்த்திக் காட்டி வலுகவனம் எண்டு எச்சரிக்கை பண்ணி, முஸ்டியை உயர்த்திக் காட்டி என்னமா தமாசு பண்ணினாங்கள். பொடியளக் கிளறி நெருப்பாக்கி சண்டைபிடிச்சுச் சாக விட்டிட்டு அந்த வெக்கேல்ல குளிர் காய வெல்லே பாத்தவங்கள். அந்த மாதிரி ஐடியா போட்டால் சரிவருமே? இப்ப சனங்கள் எல்லாம் தெளிவாயிட்டுதுகள்; மிக உறுதியாயிட்டுதுகள். சனங்களை குழப்ப வெளிக்கிட்டாக்கள்தான் இப்ப குழம்பிப் போய் நிற்கினம்.

இப்ப அவர் ஒரு இலக்கியவாதி; அரசியல் பேச ரைம் பாத்துக்கொண்டிருக்கிற சந்தர்ப்பவாதி. எங்கட நாட்டுக்காக துடிச்சுத் துடிச்சு செத்துப்போன எங்கட பூபதி அம்மாவைப்பற்றி இவருக்குத் தெரியாது; எங்கட திலீபனைப்பற்றி, எங்கட மில்லரைப் பற்றி இவருக்குத் தெரியேல்ல; எங்கட மண்ணுக்காக மடிந்துபோன சின்னச் சின்ன குருத்துகளைப்பற்றி இந்தப்பெரிய மனுசனுக்கு அக்கறையில்ல. உந்த நாசமாப் போனவங்களுக்கும் சேத்தெல்லே அந்தப் பிஞ்சுகள் தீயில குதிக்குதுகள். ஆனால் உவங்கள் என்னடாவெண்டால் லண்டனில, அமெரிக்காவில இருந்துகொண்டு கதையளக்கிறவங்களுக்கு காவடி எடுக்கிறாங்கள். கொடுமையான யுத்தத்தாலும், வறுமையிலும், துன்பத்திலயும் எத்தனையோ புத்திஜீவிகளும் திறமைசாலிகளும் முகம் தெரியாமலும் விலாசம் தெரியாமலும் செத்துப் போகுதுகள். இவங்கள் என்னடாவெண்டால் நலுங்காமல் குலுங்காமல் ஜாலியாக இருந்துகொண்டு வாயாலவிளாசித்தள்ளினவயளுக்கு விழா எடுக்கினம். மேற்குடி மக்களுக்கு கீழ்க்குடி மக்களின் அவலங்கள் பெயர்,பதவி எடுக்கிறதுக்கான கருப்பொருளாக, ஊடகமாக ஆயிட்டுது. குந்தில இருந்துகொண்டு வானத்தை விறைச்சுப் பார்த்து பேனையை உதட்டில தட்டித் தட்டி கவிதை எழுதிறவங்களுக்கு விழா எடுக்கிறாங்கள். இது தேவையா? நாட்டில ஆயிரம் ஆயிரம் நெஞ்ச உலுக்கும் சம்பவங்கள் நிறைஞ்சிருக்க; இங்க இருந்து கொண்டு என்னங்கடா குசும்பு பண்ணுறிங்க.......

சரி அதுகளப் போற்றவேண்டாம். தூற்றாமத் தன்னும் இருக்கிறாங்களா? தெருவில நாய் என்னதான் அதுபாட்டுக்குச் சென்றாலும் ' போஸ்ரைக் கண்டால் காலைத் தூக்கும் '. தனித்து குத்திட்டு நிக்கிற ஏதாவதைக் கண்டாலும் நாய்க்கு சலம் முறுக்கிக் கொண்டு வரும். அது போல என்னதான் இலக்கிய சஞ்சாரத்தில் மூழ்கியிருந்தாலும் மாஸ்ரருக்கு அரசியலுக்க லைற்றாகப் புகுந்து ஒரு மின்னு மின்னோணும் போல இருக்கும். களத்தில நிண்டு போராடுற போராளிகளைப் பற்றி ஒருவாட்டி எண்டாலும் காறித் துப்பவேணும் போல இருக்கும்.

எல்லாம் கனவில நடக்கிற சமாச்சாரம் மாதிரி; நிமிந்து கிடந்து கொண்டு வாய் நிறைய எச்சிலைச் சேர்த்து 'தூ' எண்டு துப்பினால் அவையளின்ர முகத்தில தானே அசிங்கமா வழியும். என்னதான் படிச்சதுகள் எண்டாலும் சில நடைமுறை நியாயங்கள் விளங்கிறதில்லை!

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



## இந்திய அரசியல்

# சதுரங்க விளையாட்டு



இந்திய அரசியல் மிகவும் குழப்பமான நிலையில் இருக்கிறது. மத்தியில் ஸ்திரமில்லாத சிறுபான்மை அரசாங்கம் பதவி ஏற்றுள்ளது. பாராளுமன்றத்தில் 63 உறுப்பினர்களையே கொண்ட சந்திரசேகரின் ஜனதா தளம் (சோசலிஷ்ட்) இந்திரா கொங்கிரசின் " கரடி அணைப்புடன் " எவ்வளவு காலம் நீடிக்கும் என்று சொல்லமுடியாத நிலை. அயோத்தியாப் பிரச்சனை அனுமர் வால்போல் நீண்டு கொண்டே போகிறது. ராமர் பிறந்த இடமாகச் சொல்லப்படும் அயோத்தியாவில் பாபர் மசூதியை இடித்துவிட்டு ராமர் கோவிலைக் கட்டும் போராட்டத்தை விஸ்வ இந்து பரிஷத் என்ற அடிப்படை மதவாத அமைப்பும், பாரதீய ஜனதாக் கட்சியும் தீவிரப்படுத்தி வருகின்றன. அதுமாத்திரமல்ல இந்தியாவிலுள்ள 3000 முஸ்லீம் பள்ளிவாசல்களையும் உடைத்தெறிந்துவிட்டு அங்கு இந்துக் கோயில்களைக் கட்டப் போவதாக அவை அறிவித்துள்ளன.

"அயோத்தியாவில் ராமர் கோவிலுக்கான அடிக்கல் நாட்டுவிழா பரந்த இந்துராஷ்டிரத்திற்கான ஆரம்ப விழா " என்று பாரதீய ஜனதாக்கட்சித் தலைவர் அத்வானி முழங்கியுள்ளார்.

இந்தியாவின் மதச்சார்பற்ற தன்மையை உடைப்பதாகவும், மத அடிப்படையில் மக்களுக்கிடையில் பிளவை ஏற்படுத்துவதாகவும் இந்துமதவாதம் தோற்றம் பெற்றுள்ளது. அதேவேளை மத்திய கிழக்கிலிருந்து தென்னாசியா நோக்கிப்பரவிவரும் இஸ்லாமிய அடிப்படைவாதத்தை எதிர்கொள்ள எழுந்த இன்னொரு சக்தி, இந்து அடிப்படைவாதம் என்பதையும் மறுக்கமுடியாது.

இந்துமதச் சண்டைகளினால் இந்து, முஸ்லீம் இருபகுதியிலும் நூற்றுக்கணக்கான உயிர்கள் பலியிடப்பட்டுள்ளன. மேலும் பஞ்சாப், கஷ்மீர், அசாம் மக்கள் தங்கள் சுயநிர்ணய உரிமையை நிலைநாட்ட நடத்தி வரும் போராட்டங்களும் தீவிரமும், வேகமும் பெற்று வருகின்றன. மத, இன வாதங்களும், புரட்சிகரத் தன்மைகளும், அயல்நாட்டுத் தலையீடுகளும் கலந்து ஆயுதப் போராட்டங்கள் அம்மாநிலங்களில் கூர்மையடைந்து வருகின்றன. கடந்த ஒக்டோபர் மாதத்தில் மட்டும் பஞ்சாப்பில் 300 க்கும் அதிகமானோர் கொல்லப்பட்டுள்ளனர். மண்டல் கமிஷன் அறிக்கையை அமுல் படுத்த V.P. சிங் அரசாங்கம் எடுத்த நடவடிக்கையினால் உயர் சாதியினர் என்று வரையறுக்கப்பட்டவர்களினால் முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டம், தீக்குளிப்பு போன்ற போராட்ட நடவடிக்கைகள் தற்போது இடைநிறுத்தப்பட்டுள்ளன. இத்தகைய நெருக்கடியான சூழ்நிலையில் பிரதமர் பதவியைப் பொறுப்பெடுக்காது, தனக்குச் சாதகமான தக்கதருணம் வரும்போது தேர்தலை வரவழைத்து பெரும்பான்மைப் பலத்துடன் ஆட்சியைக் கைப்பற்றுவது தான் ராஜிவின் திட்டம். ஆனால் பதவியைக் குறிக்கோளாகக் கொண்ட இத்திட்டத்தை நிறைவேற்றும் முயற்சியின் போக்கில், சந்திரசேகரின் இடைப்பட்ட ஆட்சிக்காலத்தில் நிலமை மீட்க முடியாதவாறு அதலபாதாளத்துக்குள் போய்விடும் ஆபத்தே உண்டு.

ராஜிவின் தயவில் மத்திய அரசு அமைந்துள்ள சூழ்நிலை, பிரதமர் சந்திரசேகர் மூலம் தமிழ்நாடு அரசாங்கத்திற்கு நெருக்குவாரத்தைக் கொடுக்க வாய்ப்பாக உள்ளது. தமிழ் நாட்டில் இந்திரா காங்கிரஸ், அண்ணா தி.மு.க. ஆகிய இரண்டும் தேர்தல்கூட்டுச் செய்ய உள்ளன. பாராளுமன்றத்தில் இரண்டு கட்சிகளும், சந்திரசேகர் சிறிதுகாலம் தாக்குப்பிடிக்க உதவுகின்றன. எனவே தமிழ் நாட்டு அரசாங்கத்தைக் கலைக்கச் செய்து, புதிய சட்டசபைத் தேர்தலை வைக்குமாறு மத்திய அரசைத் தூண்டிக் கொண்டே இருக்கின்றன.

www.tamileelamarchive.com

தமிழ் நாட்டில் ஜெயலலிதா, வாழப்பாடி ராமமூர்த்தி, தா.பாண்டியன் ஆகியோர் தமிழ்நாட்டில் புலிகளால் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்துவிட்டதாக புழுதியைக் கிளப்புகின்றனர். காயப்பட்ட விடுதலைப்புலிகள் தமிழ் நாட்டில் வைத்திய உதவியைப் பெற முதல மைச்சர் அனுமதித்திருந்தார். "......காயமுற்ற நோயா ளிகள், கை கால்களை இழந்த அங்கவீனர்கள், கண் தெரியாதவர்கள்; இவர்களால் தமிழ்நாட்டிற்கும், இந்தியாவிற்கும் ஆபத்து ஏற்படப்போவதாக கூறுவது அர்த்தமற்றது, சிரிப்பிற்கு இடமானது." இவ்வாறு விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி அறிக்கை ஒன்று கூறுகிறது. விடுதலைப் புலிகளுக்கெதிரான கூக்குரல்கள் டெல்லியிலும் எதிரொலிக்கச் செய்தன. தி.மு.க அரசாங்கத்தை மிரட்டுவதற்குரிய சைகைகள் காட்டப்பட்டன. தமிழ்நாடு சட்டசபையைக் கலைக்க நேரிடும் என்று எச்சரிக்கப்பட்டுமிருக்கலாம்.

பாராளுமன்றத்தில் நடைபெற்ற நம்பிக்கை வாக்கெடுப்பின்போது தனது கொள்கை விளக்க உரையில், பிரதமர் சந்திரசேகர் தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கு நிலைமை மோசமடைவதாகக் குறிப்பிட்டார். அதே வேளை ராஜிவ்காந்தி, அங்கு " தமிழ்நாடு விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ளது." என முழங்கினார். அதனைத் தொடர்ந்து கப்பல் படை வைஸ் அட்மிரலும், புதிய கப்பல்படைத் தளபதியுமான ட. ராமதாஸ் விடுதலைப் புலிகள் தமிழ் நாட்டில் நடமாடுவது பற்றிக் குற்றம் சாட்டினார். கடலில் பிடிக்கப்படுவோர் தரையில் விடுவிக்கப்படுவதாகக் கூறி " கடலில் ஒரு சட்டம், தரையில் ஒரு சட்டமா? " என்று வினவினார். இது குறித்துக் கருத்து வெளியிட்ட முதல்வர் மு. கருணாநிதி, ராம்தாஸின் செயல் போக்கிரித்தனமான அரசியல் விளையாட்டு என்று கூறினார். புலிகள் தமிழ்நாட்டில் சுதந்திரமாய் செயல்ப்படுவதாகக் கூறும் காங்கிரஸோடு ஒத்துப்பாடுவதாக ராம்தாஸின் கூற்று இருப்பதாகக் கூறி - இவை எல்லாவற்றிற்கும் ஏதோ உள்நோக்கம் இருக்க வேண்டும் என்று தனது சந்தேகத்தை வெளியிட்டார்.

ராஜீவ் - சந்திரசேகர் கூட்டு எத்தனை நாட்களுக்கு?



உண்மைதான் - ஓர் கப்பற்படை அதிகாரி தமிழ் நாட்டிற்கு வந்து அரசியல் கருத்தொன்றை கூறுவதென்றால் அதற்குத் தகுந்த காரணம் இல்லாமல் போகாது. அக்காரணம் வேறொன்றுமில்லை; தமிழ் நாடு அரசாங்கத்தை கலைக்கப் போவதாக மறைமுகமாக மிரட்டி - தி.மு.க அரசாங்கத்தை தங்கள் வழிக்குக் கொண்டுவருவதுதான்.

தமிழக முதல்வர் மு.கருணாநிதி, தமிழ்நாடு அமைதிப் பூங்காவாக இருப்பதாக வாதிடுவதோடு நில்லாமல், தனது அமைச்சர் நாஞ்சில் மனோகரனை டெல்லிக்கு அனுப்பி - பிரதமர் சந்திரசேகர், உதவிப் பிரதமர் தேவிலால் ஆகியோரிடமிருந்து தமிழ்நாடு அரசாங்கத்தை கலைக்கமாட்டோம் என வாக்குறுதி ஒன்றைப் பெற்றுவரச் செய்தார். மத்தியஅரசின் நெருக்குவாரத்திற்கு அடிபணிந்த முதல்வர் மு.கருணாநிதி தனது அரசாங்கத்தை தக்கவைத்துக் கொள்ளும் பொருட்டு, தமிழ்நாட்டில் ஈழப் போராளிகள் என்று சந்தேகிக்கப் படும் அனைவரையும் பொலிஸார் பிடித்துச் சிறையிலடைக்குமாறும் செய்தார். காயப்பட்டு, அங்கவீனர்களாக உடல் செயற்பாடு இழந்தவர்களாக சிகிச்சை பெற்று வந்த விடுதலைப் புலிகள் பலர் சிறையிலடைக்கப்பட்டனர். நோயாளர்களைப் பராமரித்தோர் தாக்கப்பட்டனர். "இந்த அநீதியான நடவடிக்கையானது எமது விடுதலை இயக்கத்திற்கும் தமிழ் மக்களுக்கும் செய்யப்பட்ட நம்பிக்கைத் துரோகமாகவே கருதுகிறோம்". என்று தமிழக அரசை காரசாரமாகவிடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி அறிக்கை கண்டித்துள்ளது.

தமிழ்நாட்டுக்கும் தமிழீழத்திற்குமான தொடர்புகளைத் துண்டிப்பதன் மூலமும், கடற் போக்குவரத்தைத் தடை செய்வதன் மூலமும் தமிழீழ விடுதலைப் போராட்டத்தை நசுக்கலாம் என்று சிறீலங்கா அரசாங்கமும், அதன் ஆதரவாளர்களும் எண்ணுகிறார்கள். தமிழ்நாட்டைப் பொறுத்தவரை தமிழ்த் தேசிய உணர்வு வளர்ந்து வருவதற்கு தமிழீழ விடுதலைப்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



போராட்டம் ஒரு தூண்டுதலாக இருப்பதாக - இந்தியக் கொள்கை வகுப்பாளர்களில் ஒரு சாரார் கருதுகின்றனர். எனவே தமிழ்த்தேசியத்தை நசுக்க முனைவோர் - தமிழ்நாடு இன்னொரு பஞ்சாப்பாக மாறிவருவதாக கூக்குரல் எழுப்பி வருகின்றனர்.

வளர்ந்துவரும் இப்போக்கிற்கு எதிராக தீவிர நடவடிக்கை எடுக்கத் தயங்கும் அதேவேளை, இதனை இப்படியே விட்டுவிடவும் இந்திய மத்திய அரசிற்கு விருப்பமில்லை. தேசிய இனங்களின் விடுதலை என்னும் வரலாற்றுப் போக்கைத் தடுத்து நிறுத்த எடுக்கும் வீண் முயற்சியே இது.

விடுதலையிலும், சமத்துவ அடிப்படையிலும் இந்திய உபகண்டத்திலுள்ள தேசிய இனங்கள் ஒற்றுமையுடனும், ஒத்துழைப்புடனும் வாழ்வது அவசியம். ஏகாதிபத்தியங்களிடம் இருந்தும், அடிப்படை வாதங்களில் இருந்தும் அது பாதுகாக்கப்பட வேண்டும். அதற்காக தேசிய இனங்களின் சுதந்திரத்தை நசுக்குவது எதிர்மறை விளைவுகளையே கொடுக்கும்.

மத்தியில் அடுத்து ஆட்சிக்கு வருவது யார்? காங்கிரஸா? அல்லது V.P.சிங்கின் ஜனதா தளமா? என்று அனைவரும் கேள்வி எழுப்பி வருகின்றனர்.

காங்கிரஸைவிட V.P. சிங்கிற்கே மீண்டும் ஆட்சியைப் பிடிப்பதற்கான அதிக சாத்தியக்கூறுகள் இருப்பதாக கணிக்கப்படுகிறது. " இல்லாதவர்களுக்கும், உள்ளவர்களுக்குமான போராட்டம்." என மேடைகளில் பேசிவருகிறார் V.P.சிங். அவருடைய மண்டல் கமிஷன் அமுலாக்கல் முயற்சி-சுத்தமானவர் என்ற பெயர், சிறுபான்மை இனங்களின் பாதுகாப்பாளர் போன்றவை அவருக்கு மக்கள் ஆதரவைப் பெற்றுக் கொடுப்பனவாக உள்ளன.

எவர் வந்தபோதிலும் வறுமை குறித்தும், தேசிய இனங்களின் சுதந்திரம் குறித்தும் தீர்க்கமான முடிவெடுத்துச் செயல்படும் ஒரு தீர்க்கதரிசியை இந்திய அரசியல் தலைமை வேண்டிநிற்கிறது. அவ்வாறு இல்லாது போனால் இந்திய உபகண்டம் சீரழிந்து. சிதறுண்டு போவதை எவரும் தடுத்து நிறுத்த முடியாது.



*சாத்தான் கூறும் உண்மை.*

*மாங்குளம் வீழ்ந்தது பற்றி பாராளுமன்றத்தில், எதிர்க்கட்சித் தலைவி திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா வாசித்த அறிக்கையில் ஒருபகுதி.....*

*( இந்திய - இலங்கை ) ஒப்பந்தத்திற்கு முற்பட்ட, 1987 யூலை வரையுள்ள காலங்களில் எமது ஆயுதப்படைகள் தனியாக நின்று பல பிரிவினைவாதக் குழுக்களுக்கு எதிராக சண்டையிட்டன. நான் அறிந்தவரை கொக்காவில், மாங்குளம் போன்ற பலம் பொருந்திய பெரிய முகாம்கள் எதிரிகளால் கைப்பற்றப்படவில்லை.*

*இப்போது எமது படைகள் PLOT, EPDP போன்ற குழுக்களின் உதவியுடன், விடுதலைப் புலிகளுடன் மட்டும் சண்டை போடும் போது, கொக்காவில், மாங்குளம் போன்ற முகாம்கள் விழுந்தது எப்படி.?*

www.tamileelamarchive.com

## எங்கள் மண்ணில் பிறந்துமா இப்படி ?????????.......

சிறீலங்கா அரசின் கைப்பொம்மைகளாகி சொந்த இனத்தையே அழித்தொழிக்கின்ற செயற்பாட்டில் தமிழ்த் துரோகிகள் தம்மை முற்றுமுழுதாக ஈடுபடுத்திக் கொண்டுள்ளனர். இந்திய ஆக்கிரமிப்பு இராணுவம் தமிழீழத்தை ஆக்கிரமித்து இருந்தபோது அதன் அடிவருடிகளாக இருந்து வாழ்க்கை நடத்திய இத்துரோகிகள் இன்று சிங்கள எஜமானனின் ஏவற்படையாக செயற்படுகின்றனர். சிங்களப் படையுடன் இணைந்து, சிங்கள இராணுவமாக மாறி தமிழின அழிப்பை வெறியோடு மேற்கொள்கின்றனர்.

இன்று சிங்களப்படை நிலைகொண்டுள்ள பிரதேசங்களில் முகாம்அமைத்து தமிழ் மக்களை கொன்று குவித்து, தமிழ்ப் பெண்களைக் கற்பழித்து, சொத்துக்களை சூறையாடி சிங்கள வெறிப்படைக்கு சற்றும் குறைவில்லாத வகையில் தமது காட்டுமிராண்டித்தனத்தை தமது இன மக்கள்மீதே கட்டவிழ்த்து விட்டுள்ளனர். மார்கழி 6ம், 7ம் திகதிகளில் கிழக்கு மாகாணத்தில் 76 தமிழ்ப் பொதுமக்கள் இத்துரோகிகளால் துடிக்கத் துடிக்கக் கொல்லப்பட்டுள்ளனர். இத்துரோகிகளால் பல தமிழ் பெண்கள் கற்பழிக்கப்பட்ட சம்பவங்களும் அங்கு இடம்பெற்றுள்ளன.

முன்னூறு அளவிலான துரோகிகள் சிங்கள இராணுவத்தில் சேர்க்கப்பட்டுள்ளனர். இவர்கள் ரஞ்சன் விஜயரெட்னா இடுகின்ற கட்டளைகளைச் சிரமேற்கொண்டு காரியமாற்றுகின்றனர். இவர்களும் இரண்டு மூன்று வருடங்களிற்கு முன்தாமும் தமிழீழத்திற்காகவே போராடுகின்றோம் என்று கூறிக்கொண்டிருந்தார்கள். இன்று தமது சுயரூபத்தையே வெளிக்காட்டியுள்ளனர்.

சில குழுக்கள் இராணுவ அரசியல் ரீதியாக முழுமையாக சிறீலங்கா அரசுடன் இணைந்து செயல்படுகின்றன. சில குழுக்கள் அரச ஆதரவுப் பிரச்சாரங்களில் இறங்கியுள்ளன. வெளிப்படையாக சில குழுக்களும், மறைமுகமாக சில குழுக்களும் சிங்கள அரசிற்காக செயற்படுகின்றன. இவ் வேளையில் திரைமறைவில் தமக்காக செயலாற்றிவரும் அனைத்து தமிழ் குழுக்களும் E.P.D.P, P.L.O.T, T.E.L.O போன்று வெளிப்படையாக தமது இராணுவத்தில் இணைந்து தமிழ் பகுதிகளில் தமது இராணுவ நடவடிக்கைகளுக்கு உறுதுணையாக இருக்கும்படி சிறீலங்கா பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ரஞ்சன் விஜயரெட்னா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதேவேளை மாலைதீவு அரசை கவிழ்க்க சதிசெய்து கைதுசெய்யப்பட்ட P.L.O.T குண்டர்களில் முப்பந்தைந்து பேரை சிறீலங்கா அரசு தண்டனையிலிருந்து மீட்டு தனது தேவைகளுக்காக பயன்படுத்துகின்றது.

மேற்குலக நாடுகளிலும் சிறீலங்காவின் கைக்கூலிகளாக இயங்கும் சில தமிழ்த் துரோகிகள் ரஞ்சன் விஜயரெட்னாக்குகின்ற விசமத்தனமான பொய்ப்பிரச்சாரங்களை மெய்ப்பிக்கும் பணியை மேற்கொண்டுள்ளனர்.


யாழ். கோட்டைப் பிராந்தியங்களை முற்றுமுழுதாக சிங்களப் படை கைப்பற்றிக் கொண்டதாகவும், இன்னும் சில தினங்களில் யாழ்ப்பாணத்தை கைப்பற்றி யாழ். வைத்தியசாலையை இயங்கச்செய்வோம் என ரஞ்சன் சிங்களத்தில் வாந்திஎடுத்ததை இவர்கள் தமிழில் வாந்தி எடுத்தார்கள். இச்செய்தி வெளிவந்த இரண்டாம் நாள் யாழ்.கோட்டை விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்ட போது இராணுவம் வெளியேறிக்கொண்டதாய் ரஞ்சன் கூறியதை இதே துரோகிகள் கிளிப்பிள்ளைபோல் ஒப்பித்தனர்.
மாங்குள முகாம் தாக்கப்பட்டு அழிக்கப்பட்டதை ரஞ்சனின் பார்வையில் இராணுவ யுக்தியாக இராணுவம் வெளியேறிக் கொண்டதாக இவர்கள் படம்பிடித்தார்கள்.

பிரச்சாரரீதியாகவும், இராணுவரீதியாகவும் சிங்கள இன வெறி ஆட்சியாளர்களுடன் கரம் இணைத்துள்ள இத்தகு துரோகிகளை இனம்காணுவது மக்களுக்கு அவ்வளவு கடினமான காரியமாய் இராது.

*தமிழீழப் போராட்டத்திற்கு துரோகம் செய்யும் யாரையும் நாம் மன்னிக்கத் தயாராக இல்லை. மன்னித்ததின் விளைவைச் சந்தித்தவர் நாங்கள். இனிமேல் துரோகிகள் மன்னிக்கப்பட மாட்டார்கள்.*

*--- யோகி ---*

www.tamileelamarchive.com



# அன்றே தொடக்கம்....

திஸ்ஸ ஜெயக்கொடி - சென்னையில் ஸ்ரீலங்கா வின் பிரதித் தூதுவராகக் கடமையாற்றியவர் - டிசம்பர் 30, 1990 " சண்டே ரைம்ஸ்" பத்திரிகை யில் வெளியிட்ட விபரங்களில் சில...

புளோட் தலைவர் உமா மகேஸ்வரனுடன் சென் னையில் யூன் 1985ம் ஆண்டு தொடர்பை ஏற்ப டுத்தினார். " அரசியல் இலக்குகளை அடைய ஆயுதப் போராட்டம் தேவையில்லையென, அதனைக் கைவிடத் தூண்டுவதே எமது நோக் கமாய் இருந்தது." என்றார்.

"பின்பொருமுறை ஜனாதிபதி ஜெயவர்த்தனாவும் உமாமகேஸ்வரனும் சந்தித்துக் கொண்டனர்." என்ற உண்மையை வெளியிட்டுள்ளார்.

ஒரு டிசம்பர் மாதம், ஜெயக்கொடி பிராங்போட் விமானத் தளத்திலுள்ள (ஜேர்மனி) ஷெரற்ரன் ஹொட்டலில், PLOT இன் பிரதித்தலைவர்களில் ஒருவரும், VOICE OF THAMILEELAM (VOT) என்ற இரகசிக வானொலிச் சேவையை நடத்தியவரு மான ஷேர்லியையும், ஸ்ரீலங்கா அரசாங்கப் பிரதிநிதியாக வந்த ஒரு சட்டத்தரணியையும் இரகசிகமாகச் சந்தித்தார்.

" PLOT இற்கு ஆயுதங்களும், பணமும் தேவை யாய் இருந்தது. ஆயுதங்கள் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் சண்டையிடுவதற்கே ஆகும்."

" தேசிய பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத் முதலி PLOT ஏஜன்ட் ஒருவருடன் ஜேர்மன் - சுவிஸ் எல்லையில் உள்ள கோப்பிச் சாலையில் சந்தித்துக் கொண்டார்."

" PLOT செய்கின்ற சேவைகளுக்குத் தக்கவாறு காலத்துக்குக் காலம் சுவிஸ் வங்கி ஒன்றில் PLOT இற்கு பணம் செலுத்த அரசாங்கம் ஒத்துக் கொண்டது."

"இந்தக் குழுவிற்கு ஆயுதம் கொடுப்பது குறித்து அரசாங்கம் ஆழமாக யோசித்துக் கொண்டிருந் தது."

" இதற்குப் பிரதிஉபகாரமாக ஏனைய போராளிக் குழுக்கள் மீது உளவு பார்க்குமாறு PLOT ஐ அர சாங்கம் பணித்தது."

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



# காகக் கூடு

சிறுகதை

- சுபா -

நாமார்க்கும் குடியல்லோம்;
நமனை அஞ்சோம். நரகத்தில் இடர்ப்படோம்
நடலை இல்லோம்.
ஏமாப்போம்; பிணியறியோம்
பணிவோம் அல்லோம்
இன்பமே எந்நாளும் துன்பமில்லை..... என்ற தேவாரப்பாடலை முணுமுணுத்தவாறு துரையர் சைக்கிளை உருட்டியவாறு படலையைத் திறந்துகொண்டு இறுப்பிட்டியில் உள்ள தனது தேனீர்க்கடையை நோக்கி சென்று கொண்டிருந்தார். அவரது மகள் பாமாவும், மகன் ரவியும் வீட்டில் நின்று கொண்டிருந்தார்கள்.

முற்றாக விடியாத காலைப் பொழுது ; குருவிகள் இசைத்தன. தெற்குக் கடற்காற்று தணிந்த சீழ்க்கை ஒலியால் கூவி அழைத்தது. பூவரசமரங்கள் காற்றுக்கு ஆடின. இறுப்பிட்டித்துறையை தொட்டு முடிகிற யாழ் தொடுவீதி தனது பலஆயிரம் அகன்ற கண்களால் பார்த்தது. அவர் அதே தேவாரப் பாடலை மீண்டும் குரலை அசைத்துப் பாடியபடி அந்த வீதியில் கிறீச்! கிறீச்! என்று சத்தம் போடுகிற சைக்கிளில் ஏறி வலித்துக்கொண்டு ஓடிக்கொண்டிருந்தார். அந்த வீதியில் சைக்கிளில் ஓடுகிற சுகம் எங்கேயும் கிடைக்காது தான். மின்கம்பத்தில் ஒற்றைக் காகம் இருந்து "கா" "கா" என்று கரைந்து கொண்டிருந்தது. அந்த ஒலி மேலும் அந்தத் தெருவீதியில் முகாரியை நிறைத்திருந்தது.

துரையர் நல்ல பிரயாசைக்காரர். நல்ல நீதிமான் எனப் புகழப்படுபவர். அவர் பிள்ளைகளில் மூவர் கல்யாணம் செய்து கொண்டு ஜெர்மன், பிரான்ஸ் என போய்விட்டார்கள். அவரோடு கடைசிப்பிள்ளைகள் இருவரே நின்றிருந்தார்கள்.

தனது பிள்ளைகள் ஒவ்வொருவராக அவரை விட்டுப் பிரிந்து பறந்து சென்ற போதெல்லாம் அன்பே உருவான அந்த மனிதர் மனம் கலங்கியிருக்கிறார். விடை துரத்திவிடும் தாய்க் கோழியைப்போல் அவர் இருந்துவிட முடியாது வேதனையால், பிரிவுதரும் நோவின் வலியால் வாடிப் போயிருக்கிறார். பிள்ளைகளும் வெளிநாடுகளுக்குப் போனதும் " ஐயா நாங்க இருக்கிறம்; நீங்கள் எதற்கும் பயப்பட வேண்டாம். " என்றும், அடிக்கடி சுகம் விசாரித்தும், தங்கள் சுகம் சொல்லியும், " ஐயா! அம்மா! கவனம்!" என்று பலதடவை அறிவுறுத்தியும் எழுதினார்கள். ஆனால் காலப் போக்கில் அவை நின்று போயிற்று.

சமூகத்தில் புரையோடிப்போன சீதனப்பிரச்சனைக்கு எதிராக போராட முடியாதவராய் உழைத்து உழைத்துச் சேர்த்து ஒவ்வொருவராய் கரை சேர்த்துவைப்பதற்கு துரையர் பட்ட கஸ்டங்கள் கொஞ்சமாயிருக்கவில்லை. எப்படியெல்லாம் கஸ்ரப்பட முடியுமோ அப்படியெல்லாம் கஸ்ரப்பட்டார். அந்த மண்ணை நம்பியே வேரூன்றி நின்ற ஒரு பெரிய விருட்சம் தான் அவர். இன்று அந்த விருட்சத்தின் கிளைகள் எல்லாம் தறித்து மொட்டையாகி நின்றாலும் ஒருசில நம்பிக்கையின் துளிர்கள் அந்த விருட்சத்தில் துளிர்த்துத் தான் இருந்தன.

" எப்படியும் என் பிள்ளையள் திரும்பி வருவினம்; பிள்ளையளைப் பார்க்காமல் இந்தச்சீவன் கண்ணை மூடாது; பிள்ளையள் மறந்து போயிட்டினம், என்னால மறக்க முடியாது பொன்னம்மா. " என்று தன் மனைவியோடு சொல்லிக் கவலைப்படுவார்.

" என்ன நீங்க குழந்தப்பிள்ளையளப் போல ; பிள்ளையள் என்ன அப்பிடியே போட்டுதுகளே? இங்க தானே வரோணும்." என்று அவள் தேற்றுவாள்.

அவரின் தேனீர்க்கடை குண்டு வீச்சில் சிதைந்து போய்விட்டது. பார்த்தவர்கள் " என்ன துரை இந்த இடத்தை விட்டிட்டு எங்கையாவது போகப்பாரன்." என்று சொன்னார்கள்.

எங்கையாவது போவன் என்று சொன்னபோது துரையர் மனம் கலங்கி " நிலவுக்குப் பயந்து பரதேசம் போறதே?" என்று கூறிக்கொண்டு, மீண்டும் அந்த இடத்தில் சிறிது தள்ளி கொட்டில் ஒன்றை அமைத்துக் கொண்டு நிலையானார்.

ஏராளமானவர்கள் அவரின் தேனீர்க்கடையில் வந்து தாகம் தீர்த்துப் போவார்கள். நிறையப் பேர் அவருக்குப் பழக்கம். நெடு நேரமாயிருந்து நாட்டு நிலைமைகளைப்பற்றி ஆய்வார்கள். அத்தனை பேரையும் அன்போடு உபசரித்து அவர்களின் துயரங்களில் எல்லாம் அவர் பங்கேற்று நின்றார்.

அன்று காலை அவர் கடையைத் திறந்து வியாபாரம் செய்து கொண்டிருந்தார். ஏழாற்று கடல்ப்பிரிவில் இருந்து குமுதினிப் படகில் நடந்த கோரத்தை சொல்லி அழுவதுபோல கடல்க்காற்று இரைந்து கொண்டிருந்தது. கரையேற்றிக் கட்டுமரங்கள் கிடந்தன. அவற்றில் எலும்பும் தோலுமாய் இருந்த வயோ

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்




திபர்கள் சிலர் உட்கார்ந்திருந்தனர். அன்று ஒன்பது மணியளவிலேயே அவரது ஒரு பிள்ளை எழுதிய கடிதம் உருக்குலைந்து போய் அவரின் கைக்கு எட்டியது. தனது பிள்ளைகளைக் கண்டது போலவே நெஞ்சில் பொங்கிவரும் ஆனந்தம் மிதக்க கண்களில் நீர்பனிக்க கடிதத்தைப் பிரித்தார்.

அவநம்பிக்கையோடும், அங்கலாய்ப்போடும் எழுதப் பட்டிருந்தது கடிதம். அதிக காலங்கள் கடந்து பெரும் விமானக் குண்டுவீச்சுத் தாக்குதலின்பின் அவர்கள் சுகம் விசாரித்தும், உடல் நலம் குறித்தும், உற்றார் உறவினர்நிலை கேட்டும் இருந்தது. அந்தக் கடிதம் இடையில் அவரையே ஒருகணம் ஆடவைத்துவிட்டது. நிலை குலைந்துபோய் அந்த வரிகளை அவர் படிக்கமுயன்றார். அக்கணத்தில் விருட்சத்தை புயல் வந்து தாக்கியதுபோல உணர்ந்தார்.
" ஐயா நீங்கள் எவ்வளவு சொல்லியும் பிடிவாதமாய் இருக்கிறியள்? நீங்கள் அவள் பாமாவையும், தம்பி ரவியையுமாவது இங்கால அனுப்புங்கோ! எத்தனை தடவை எழுதியாச்சு ஏன் என்றுகூடக் கேக்கிறியள் இல்லை?...."

"சிவனே! இந்த மண்ணைவிட்டு முற்றாகவே இந்தப் புள்ளையள் போட்டுதுகள்". என நெஞ்சை துயர் வந்தடைக்கச் சொன்னார்.

"என்னண்ணை உங்களுக்குள்ளேயே பேசிக் கொண்டிருக்கிறியள்". என தேநீர் குடித்துக் கொண்டிருந்த அவரது தம்பி குணம் தமையனாரைக் கேட்டார்.



" அதை ஏனடா தம்பி கேட்கிறாய்; பிள்ளையள் எல்லாம் போன போன இடங்களிலிலேயே வாழ்விருக்குதெண்டு நம்பிப் போட்டுதுகள் . என்னதான் அங்க பெரிய சுகத்தைக் கண்டு கொண்டினமெண்டு தெரியேல்லையடா? ஐயோ இங்க நிற்கிற பிள்ளையளையும் அனுப்பச்சொல்லி எவ்வளவு தைரியமா எழுதினம் பாரடா." என தம்பியாருக்கு சொன்னார். கூடியிருந்தவர்களும் கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

"ஏன் அண்ணே! இங்கே இருந்து இரண்டு இலட்சம் மூன்று இலட்சம் என்று ஏஜென்சியளுக்கு கட்டி வெளிநாடுகளுக்கு போக நிற்கிறவை இந்த மண்ணில நடக்கிற போராட்டத்திற்கு ஒரு பத்தாயிரம் தாறதுக்கு மனம் வரேல்லத்தானே. எத்தனை பிள்ளையள் எதிரியோட நேருக்குநேர் நின்று போராடிச் சாகிறதைப் பாத்துக் கொண்டுதானே இவை இவ்வளவும் செய்யினம். இப்படி போறவையும், அங்கினை இருந்து வாங்கோ, வாங்கோ என்று கூப்பிடுறவையும்..... வெறும் பணப் பட்டுவாடாதானா? எங்களோடையோ, எங்கட மண்ணோடையோ எந்த விதமான ஒட்டும் உறவும் இல்லையா?" என்று அவரின் தம்பி உள்ளம் கொதித்து சத்தமாய்ப் பேசினார். கூடியிருந்தவர்களுக்கும் அது சரியென்றே பட்டது.

" பொன்னம்மா இங்க வா! கடையைப் பார்! நான் பிள்ளையளுக்குச் சாப்பாடு கொண்டுபோகவேணும்." என மனைவியிடம் சொல்லிக் கொண்டு புறப்படத் தயாரானார். வெய்யிலின் அகோரம் தாங்க முடியாது நாக்கைத் தொங்கவிட்டபடி நாயொன்று பூவரச மரக்கிளையின் கீழ் நின்றுகொண்டிருந்தது. ஐந்தாறு வயது நிரம்பிய பிள்ளைகள் சேர்ந்து மீன்பிடிப்பதற்காக பொறிவைத்து விளையாடிக் கொண்டிருந்தார்கள். கெலிகொப்டரின் சத்தம் பலமாக எழவே அந்தந்த இடங்களிலேயே எல்லாவற்றையும் போட்டுவிட்டு பனை மரங்களோடு ஒட்டி நின்று பாதுகாப்புத் தேடிக்கொண்டு சிறிய விழிகளால் ஆகாசத்தை எச்சரிக்கையோடு பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

துரையரும் அவரது தம்பியும் கெலிகொப்டர் எங்கே போகிறது என அவதானித்துவிட்டு சைக்கிளை ஓட்டிக்கொண்டு தத்தமது வீடுகளை நோக்கி சென்று கொண்டிருந்தார்கள்.

கடைக்குட்டி முற்றத்துப்படலையில் தந்தையாரின் வரவைப் பார்த்துக் கொண்டு பசியோடு காத்திருந்தான். தந்தையாரைக் கண்டதும் ரவி ஆனந்தத்தால் துள்ளிக்குதித்தான். மாடு ஆடுகளுக்கு தண்ணீர் வைத்து, புல்லுள்ள இடமாக மாற்றி கட்டிவிட்டு பாமா வந்தாள். தம்பியாருக்கும் தனக்குமாக சாப்பாட்டை ஒரு தட்டில் எடுத்துவந்து இருவருமாய் சேர்ந்து சாப்பிட்டார்கள்.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



முற்றத்திலும் வீட்டை அண்டிய கட்டாந்தரையிலும் கானல் நீர் எழுந்து கொண்டிருந்தது. வெப்பம் தாங்க முடியாது துரையர் முற்றத்தில் கிணற்று நீரை அள்ளி வார்த்துவிட்டு வெளிவிறாந்தையில் சிறிது நேரம் கண்ணயர்ந்தார்.

வெய்யில் தாழவிட்டு தனது பிள்ளைகளையும் கூட்டிக்கொண்டு தென்னந்தோப்புப் பக்கமாக போனார். பாறைக்கற்களைப் பேர்த்து கிடங்கெடுத்திருந்த இடங்களில் புதிய தென்னம் நாற்றுகளை நட்டார். தோப்பின் அடி அழிந்து போயிருந்த இடங்களிலும், முதிய தென்னை மரங்களுக்கருகிலும் அவர் தென்னம் நாற்றுக்களை நட்டுக்கொண்டே " டேய் ரவி உன்ர அக்காளவை திரும்பிவந்து இதுகளைப் பார்க்க வேணுமடா!" என்று ரவியைப் பார்த்து சொன்னார். பாமா தந்தையின் ஏக்கத்தைப் புரிந்துகொண்டு கலக்கமடைந்தாள்.

" எப்ப ஐயா அக்காவை வருவினம்?" என்று ஏக்கத்தோடும், அன்பின் தேடலோடும் ரவி கேட்டான்.

" உன்னை வரட்டாமடா! போகப் போறியே? " என ரவியை பார்த்துக் கேட்டார்.

ரவி ஏதும் பதில் கூறாமல் தந்தையாரைப் பார்த்தான். பாமாவும் அப்படியே பார்க்கச் செய்தாள்.

" என்ன அப்பிடிப் பாக்கிறீங்க." என கூறியபடி ரவியையும் பாமாவையும் அணைத்தபடி " இங்க இருந்து என்ர புள்ளயளை இனி வெளிநாடுகளுக்கு போக விடமாட்டன்; உங்கட அக்காளவையும் எங்கட மண்ணிலதான் வாழ்க்கை இருக்கெண்டதை மறந்து போகப்படாது." என்று சொல்லிக்கொண்டு பிள்ளைகளோடு தென்னம் தோப்பை சுற்றிப்பார்த்துக்கொண்டு வந்துகொண்டிருந்தார்.

அவலக்குரல் கொடுத்து குயில்க் குஞ்சொன்று கூவியது. துரையர் திரும்பிப் பார்த்தார். தென்னைமரத்தில் காகக்கூடு; அதில் இருந்த குயில் குஞ்சுகளை காகம் ஒன்று கொத்திக் கொத்திக் கலைத்தது. சிறிது நேரத்தில் அந்தக் குயில்க்குஞ்சு காற்றில் இறைக்கைகளை அடித்து பறக்க முயன்று, கீழே சடைத்துவளர்ந்திருந்த அறுகம்புற்களின்மேல் விழுந்தது. இறக்கைகளை அகல விரித்து மரணபீதியோடு நடைபாதையில் கிடந்த குயில்க்குஞ்சைப் பார்த்து ரவி " பாவம் ஐயா " என்று கூறிக்கொண்டே அதைத் தூக்கி ஓரமாய் புற்களின் மறைவில் வைத்தான்.

" சோம்பேறிக் குயில்கள் தங்களுக்கென்று ஒரு கூடு கட்டத்தெரியாதவையடா." என்று கூறி அடிபெயர்ந்துபோன தன்பிள்ளைகளின் வாழ்வை மனதில் எண்ணிக்கொண்டே, காகம் கொத்திக் கொத்திக் கலைத்து நிலத்தில் விழுந்துகிடக்கும் குயில் குஞ்சைப் பார்த்தார். கண்களில் நீர் பனிக்க, பருந்துக்கு இரையாகப் போகும் தன் குஞ்சுகளை இறக்கைகளால் அணைத்துவிடும் தாய்க் கோழியைப் போல தனது இருபிள்ளைகளையும் தன்னோடு இறுக அணைத்துக் கொண்டு வீட்டை நோக்கி நடந்தார்.

குயிலின் அவலமான கூவல் அந்தத் தென்னந் தோப்பை நிறைத்தது.

# # # #

## உங்களிற்கு

கருத்தோட்டமுள்ள, ஆரோக்கியமான கதைகள், கட்டுரைகள், கவிதைகள் என்பன எதிர்பார்க்கப் படுகின்றன.

உங்கள் ஆக்கங்கள் ஆசிரியர் குழுவின் ஆய்விற்கும், தேவை ஏற்படின் திருத்தத்திற்கும் உட்படும் என்பதையும் அறியத்தருகின்றோம்.

ஆக்க பூர்வமான விமர்சனங்களும் எதிர்பார்க்கப் படுகின்றன.

* உங்கள் பத்திரிகையை நெறிப்படுத்த வேண்டிய கடமை உங்களதே *

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



# "தாம் வாழ குருவிக்கு ஒரு கூடு தேவை என்றால் தமிழன் என்ற......"

காலையில் எழுந்து
கறுப்பியில் பால் கறந்து
தேநீர் குடித்து விட்டு
வயலுக்கு போகையிலே

சூரியனும் எழுந்து வாழ்த்தியனுப்பும்
ஈழத்து நிலா வெளிக் கிராமம்
என் கிராமம்

புல்லில் கூட வில்வளைக்கும்
புலிகள் வாழும் கிராமம்

மாலையில் மீண்டும் மயிலைக்காளை
வண்டி பூட்டி வீடுநோக்கி போகையிலே
காலையில் கடலடியில் புறப்பட்ட
சூரியனும் கண்ணுறங்க காடுகளுக்குள்
பதுங்கிக் கொள்வான்

இயற்கையுடன் இல்லறம் நடத்திய நான்
இவையெல்லாம் இமைகள் ஈரமாகும்
என் ஈழத்தின் பழைய நினைவுகள்

இன்று நான்(நாம்) விதைத்த பயிர் நிலத்தில்
சிங்களப் படைகளின் பாதங்களா ?
நாம் நடந்த பாதையெல்லாம்
சிங்கள இராணுவத்தின் படையெடுப்பா ?

என்னை பெற்றெடுத்து
பெயர் வைத்து
நல்லறிவு எனக்களித்து
நல்லவனாய் வளர்த்துவிட்ட
என் தாயெங்கே ?
எந்த சிங்கள துர்நாயின்
துப்பாக்கி குண்டுக்கு துடிதுடித்து
மாண்டாளோ ?

அறிவுரைகள் அள்ளி வழங்கும்
பள்ளி ஆசிரியர் அப்பா
எனது தந்தை
அதனால் தானா
நாக்கிழுத்து நறுக்கப் பட்டு
ரயர் போட்டு எரிக்கப் பட்டார்

அன்பால் அனைவரையும்
அணைத்துக் கொள்ளும் பூங் கொடி
என் தங்கை எங்கே ?
எந்த சிங்கள மிருகத்தின்
பாலியல் வன்முறைக்கு
பலியாகிப் போனாளோ ?

நான் வாழைக்கு நீர்பாச்ச
வாய்க்காலில் அமர்ந்திருந்து
வார்த்தைகளினால் கொஞ்சிமகிழ்ந்த
என் மாமன் மகள் எங்கே ?
எந்த சிங்கள முகாமில்
சீரழிந்து கிடக்கிறாளோ!

இவைகள் என்வீட்டின்
நிகழ்வல்ல

உன் வீட்டின் நிகழ்வும் கூட
நண்பா

இனப் படுகொலையால்
உன் இரத்தம் கொதிக்க வில்லையா ?
இங்கு உன் வாழ்க்கையை நான்
விமர்சனம் செய்ய வரவில்லை

இத்தனை இழப்புக்களுடனும்
புலிகளுடன் மக்கள் நடாத்தும் போரில்
உன் பங்கு என்ன என்று கேட்கிறேன்

பிரான்சு வாழ் ஈழ மக்களே !
தம்பியை நம்புங்கள்
எம் தலைவனை நம்புங்கள்

பார்வையாளர்களாக இல்லாமல்
நாமும் பங்காளிகளாக மாறுவோம்

இன்றுபோல் என்றும் கூடி
புலிகளின் கரங்களை
பலப்படுத்தி - எம்
தங்க தமிழீழ தாயகத்தை
வென்றெடுப் போம்



*நிலாமகன் 29.07.1990*

*(தமிழீழ பொதுமகன் ஒருவரினால் 29.07.90 அன்று பாரிசில் வெளியிடப்பட்ட இக் கவிதையை இங்கு பிரசுரிக்கின்றோம்.)*

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்





[redacted]

## ஒரு கலாவதானியின்

# விமர்சனப் பார்வை

[redacted]

தமிழீழ விடுதலைப் புலிகளின் கலாச் சாரப்பிரிவின் பிரெஞ்சுக் கிளையின ரால் வெளியிடப்பட்ட ஜீவராகங்கள் பாடல் ஒலியிழை நாடா பற்றிய விமர் சனம்.

ஜீவராகங்கள் ஜீவனுடைய ராகமேதான்! பொழுது சாயும் நேரம், கடற்கரையில் போராளிகள் எதிரியை முறியடிக்க அவனின் வரவு நோக்கிக் காத்திருக்கின் றார்கள். பாதுகாப்பு உறையில் தோன்றுகின்ற காட் சியே முதலில் எம் கண்களில் ஒரு கவிதை எழுதுகின் றது.

துயர்படவும், துடித்து மாளவும், அடிபடவும், குண்டு துளைத்தோர் கோரம் காணவும், அழுது துயர் தோய்ந்து சாகவுமோ மனிதன் பிறந்தான்! எம்மை ஒத்த ஜீவன்கள், எம் வாழ்வுக்காய் போராடுவதையும், மண்ணை மீட்கப் போரில் சாவதையும், அந்நிய தேசத் தில் நாம் அகதிகளாய் துயருறுவதையும், மண்ணுக் காய் ஆற்ற எமக்கு கடமை ஒன்றிருப்பதையும் நினைவூட்டுவதாய் பாடல்கள் அமைந்துள்ளன.

ஏக்கங்களையும், நம்பிக்கைகளையும் சுமந்துகொண்டு புதியதொரு உலகத்திற்குச் செல்லும் உணர்வு, பாடல் களைக் கேட்கும் போது ஏற்படுகின்றது. அம் மனயாத் திரை எம்மையறியாமல் இயல்பாகவே நடைபெறுகின் றது. இதிலுள்ள பாடல்கள் சிலவற்றைப் பார்ப்போம். "கண்ணோடு ஒரு கனவு" என்று தொடங்குகின்ற பாடலில் "செம்புழுதித் தரைகளெல்லாம் செந்நீர் குளிக்கிறதே" என்று ஒலிக்கின்ற பாடல்வரி, புழுதி அளைந்து ஓடி ஆடிய தரைகளில் இன்று ஒரு விடு தலைப் போர் நடக்கின்றது என்பதைக் காட்டி நிற் கின்றது. அதே பாடலில் "செந்தமிழ் மண் நிலை எண்ண கண்ணோரம் கரைகிறதே!" என்று வருகின் றது. தாய்மண் பிரிவின் வலியை நொந்து அனுபவிக் கின்றார் அக் கவிஞர். கேட்கிற எம் கண்களை குள மாக்குகிறது அக் கவிதை.

"எங்கள் தேசம் எங்களுக்கே உரிமை" என்ற பாடல் எமது தேச விடுதலைக்காக நாம் அனைவரும் ஒன் றிணைந்து செயற்பட வேண்டும்; அதற்காகப் பாடுபட வேண்டும் என கவிஞர் வலியுறுத்துகிறார். விடுதலை என்பது பெற்றுத் தருவதல்ல; போராடி இரத்தம் சிந்திப் பெறுவது என்பதை வலியுறுத்தும் வகையில் இப்பாடல் அமைகிறது.

"மனிதன் என்றொருவன் அடிமையாகலாமா?" என்ற பாடலில் வரும் "அடிமை நிலை இதுவேண்டாம்; என்றும் சுதந்திரம் சுதந்திரம்" என்ற வரிகள் ஒரு தந்தையார் தன் குழந்தைக்கு சொல்வது போல் ஒலிக்கின்றன.

"புதிய சரிதம் எழுதவே" என்று தொடங்குகிற பாட லைப் பார்ப்போம். இந்திய இராணுவம் 1987 ல் எமது தேசியத் தலைவரை நயமாக அழைத்துச் சென்று பின்னர் அசோகா ஹொட்டலில் சிறைவைத்திருந்த போது மக்கள் நாட்டில் திரண்டெழுந்தார்கள். இந் திய இராணுவத்தை மறியல் செய்தார்கள். தலைவரை விடும்படி போராடினார்கள். இந்த நிதர்சனத்தைக் கவிஞன் தன் பார்வையில் மிக நேர்த்தியாக எளி மையாகப் பாடுகிறான்.

காவலனைக் காக்கும் மக்கள் மலைகளல்லவோ!
மாமனிதன் பிரபா ஈழத்தலைவனல்லவோ!
பெரும் புயலை சிறையில் பூட்டி அடைக்க முடியுமா?

தெம்மாங்கு இசைத் தன்மையில் பாடப்படும் "உலக மெங்கும் வாழும் தமிழர்களே" என்ற பாடல் உலகத் தமிழர்களின் கடமை எது என்று வலியுறுத்திச் சொல்லி இருக்கிறது.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



மேலும் அந்தப் பாடலில் "எங்கள் பலம் நம்பித்தானே எம் இளைஞர் களம் போனார்" என்று கவிஞர் ஆணித்தரமாகச் சொல்லியிருக்கிறார். நாங்கள் எமது போராட்டத்தை உலக நாடுகளை நம்பித் தொடங்க வில்லை. எம் உரிமையை வென்றெடுக்க நாம் தான் போராட வேண்டும். தூங்கிக் கிடக்கும் எம் சகோத ரர்களுக்கு உரிமையோடு கவிஞர் உரைக்கிறார். "கொள்கைகள் சமத்துவம் அத்தனையும் செயற்ப டுமே".

அந்தக் கவிஞனின் எதிர்பார்ப்பின் சிறப்பம்சமாகவும், உறுதியோடும், நம்பிக்கையோடும் உச்சாடனமாகிறது அப்பாடல் வரி.

"ஏன் இந்த மௌனமோ?" என்று தொடங்குகிற பாடலில் "அன்பே" எனப் போராளியை விளித்து, "நீ மகிழ்வான தூக்கம் கொள்கிறாயா?" எனக்
கேட்டு நிற்கிற போது அத்துணை நெருக்கம், ஐக்கிய மான உறவு விடுதலைப் புலிகளுக்கும் மக்களுக்கும் இடையே நிலவுவதைக் காட்டி நிற்கிறது.

"நாம் பிறந்த நமது மண் எங்களதே" என்ற பாடலில் எமது மண்ணில் எம்மை யார் அடிமைப்படுத்துவது? காற்று, வானம், பூமி யாவும் மக்களுக்கே என்று மார்புதட்டி வீரமாய் முழக்கமிடுகிறார்.

மனித நேயம், விடுதலை, வீரம், தாய்மண் என்ற பொருள்களில் எழுதப்பட்ட பாடல்கள் என்றும் சிறப்பானவையே.

அடுத்து இசை தொடர்பாகப் பார்ப்போமாகில் நல்ல இசையொன்றை கேட்கின்ற திருப்தியிருக்கிறது. ஈழத்து இசைத்துறையில் முன்னேற்றகரமான ஒரு பாய்ச்சலை இசை அமைப்பாளர் செய்திருக்கிறார்.

"தொலைந்த வாழ்க்கையை எண்ணித் தங்கை கண் ணீர் வடிக்கிறாள்" இங்கே பாடகர் அத்துணை துய ரோடு பாடுகிறார். அத்தனை வாத்திய கலைஞர்க ளின் விரல்களும் சோக நெருடல் கொள்கின்றன.

மேற்கத்தைய இசைக் கருவிகளை மிக நுட்பமாக கீழைத்தேய இசை வாத்தியங்களின் இசைக்கு இணை யாக வாசிக்கச் செய்திருக்கிறார்கள். இதனால் இயல் பான மண்ணின் உறவுகளில் இருந்து விலகி சற்று ஆடம்பரமாக அமைந்திருக்கிறது. ஜீவராகங்கள் ஒலி இழை நாடாவில் உள்ள பாடல்களை நாம் இசைத் தன்மையில் தரம்பிரித்துப் பார்க்கையில், கர்நாடக இசைத்தன்மையோடு "ஏன் இந்த மௌனமோ" என்ற பாடலும், தெம்மாங்குப் பாடல் இசைத்தன்மையோடு "உலகமெங்கும் வாழும் தமிழர்களே" என்ற பாடலும், போர்ப் பாடல் இசைத்தன்மையோடு "நாம் பிறந்த நமது மண் எங்களதே", "எங்கள் தேசம் எங்களுக்கே உரிமை" என்ற இரு பாடல்களும், மெல்லிசைப் பாடல்களாக ஏனையவையும் விளங்குகின்றன.

பாடல்களின் இடையே அமையும் இசை (INTERLUDE) பாடலின் கருத்தை வலியுறுத்துவதைப் போல் அமைந் திருக்கின்றது. பாடல்களின் வரியை ஆமோதிப்பது போலவும், அடுத்து என்னவென்று வினாவுவது போலவும், தேவையான இடங்களில் மிக நேர்த்தியாக கையாளப் பட்டிருக்கிறது. இடை இசையை திறம்பட உய்த்து அனுபவித்து இசையமைப்பாளர் இசை அமைத்துள்ளார்.

பாடல்கள் சோகமாகப் பாடும் போதும் சரி, வீரமாகப் பாடும் போதும் சரி பாடல்கள் வெளிப்படுத்துகின்ற உணர்ச்சியோடு இடை இசை ஒத்துழைத்து நிற்கிறது. கேட்போர் உள்ளங்களில் பாடல் தாங்கியிருக்கின்ற கருத்தை அல்லது செய்தியை பதிய வைப்பதற்கு இசை உதவி உள்ளது.

"கள்ளுக் கொட்டில் பக்கம் போகாதே
காலைப் பிடித்துக் கெஞ்சுகிறேன்" என்ற ஈழத்துப் பாடல் நல்ல கருத்தைக் கொண்டிருக்கின்றது. ஆனால் அதற்கு இசையமைப்பாளர் இசை அமைத் திருக்கின்ற தன்மை அப்பாடலை கள்ளுக் குடித்த வன் ஆட்டம் போட உவப்பாய் அமைத்துவிட்டிருக் கிறது. எனவே பாடல்கள் நல்ல பொருத்தமான இசையோடு இழைந்து வரும்போதே அது தாங்கி வருகின்ற விடயத்தை நேர்த்தியாக கேட்போர் மன தில் உறைய வைக்கும்

"நாம் பிறந்த நமது மண் எங்களதே" எனத் தொடங்கு கிற பாடல் மண்மணத்தை உணர்த்துவதாய் இசையில் வர்ணங்களைச் சேர்த்துள்ளார் இசையமைப்பாளர். எனினும் அப்பாடல் முழுநிறைவோடு போர் ஆக் ரோஷ வெளிப்பாட்டைத் தந்துவிடவில்லை.

திலீபன் சாகும்வரை உண்ணாவிரதம் இருப்பதைப் படம்பிடிப்பது போல் எழுதப்பட்ட பாடலுக்கு உயிர்ப் பூட்டல் போல் இசையமைப்பாளர் இசையமைத்திருக் கிறார். "ஏன் இந்த மௌனமோ அன்பே ஆனந்த சயனமோ" என்ற பாடலில் "திலீபனே!" என்கிற போது மக்களுக்காக வாழ்ந்து எரிந்து கொண்டிருக் கின்ற தீபத்தின் அசைவு தெரிகின்றது. அந்த இதயத் தின் ஒலிப்பும் கேட்கிறது.

"ஒரு தோழன் வயற்காட்டில் பிணமாகலாம்" என்ற பாடல் வரியைப் பாடுபவர்களும் சரி, இசைக்கலை ஞர்களும் சரி அப்படியே ஒரு கணம் மௌனித்துப்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



போனார்கள். பிரபஞ்சம் கூட ஒரு கணம் நின்று போனதாக இசையமைப்பாளர் உணர வைத்து விடுகிறார். இப்படி சில பாடல்களில் இசையமைப்பின் சிறப்பையும், விசேட தன்மைகளையும் நாம் காணலாம்.


நன்றாக பயின்ற குரல்வளம் மிக்கவர்கள் பாடல்களை உணர்ச்சியோடு பாடியிருக்கிறார்கள். சொற்கள் விளங்க உச்சரிக்கப்பட்டுள்ளன.

பாடல்களை மெல்லிதாக ஒலிக்கவிட்டுக் கேட்கும் போது இசையில் சில இடங்களில் சமனிலையின்மை காணப்படுகின்றது. இப்படி சில குறைகளைக் கொண்டிருந்தாலும்-

- ஜீவராகங்கள் காயம் பட்டுப் போன ஏராளமான ஜீவன்களின் இதய நரம்புகளை மீட்ட வல்லது. தாய் மண்ணின் பிரிவின் வலியை சதா தனித்து உணர்ந்தவர்கள் கூடியிருந்து உள்ளம் குமுறவும், உறுதி பெற்றெழுந்து வாழ்வை மீட்கவும் வழி காட்டும்.

இதே போன்று மண்ணின் விடுதலை வேண்டி ஏராளமான பாடல்கள் எழ வேண்டும்.

விடுதலையை வென்றெடுக்க கலையும் இலக்கியமும் கூட ஒரு ஆயுதமாக திகழ்கின்றது என்பதை மனதில் கொண்டு அழுத்தம் கொடுத்து செயற்பட முன்வாருங்கள்.



STF 1: யுத்த நிறுத்தம் நல்லதுதானே?
STF2: ஆனால் சனங்களைக் கொல்ல முடியாதே!



**தமிழீழக் கலை, இலக்கிய கர்த்தாக்களை தலைவர் பிரபாகரன் அவர்கள் அண்மையில் சந்தித்து உரையாடினார்.**
**ஆக்கபூர்வமான அந்த உரையாடலில் இருந்து.....**

" ரஷ்யாவில் அன்றைய போராட்டம் முடிவடைந்து விட்டாலும், அந்தப் போராட்ட உணர்வு இலக்கியங்களினூடாக இன்னமும் வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறது. இன்னும் போராட்ட காலத்திலேயே வாழ்ந்து கொண்டிருக்கின்றோம் என்ற உணர்வு அங்குள்ள மக்களுக்கு ஏற்படும் விதமாக இலக்கியங்கள் படைக்கப்பட்டுள்ளன. எமது போராட்ட சூழ்நிலையிலும் பல உணர்ச்சிகரமான சம்பவங்கள் நடைபெற்றுள்ளன; பல தியாகங்கள் நடைபெற்றுள்ளன. அவற்றையெல்லாம் இலக்கியத்தினூடாக மக்களுக்கு புகட்டவேண்டும்."

" கலை, இலக்கிய வடிவங்களூடாக மக்கள் மனதில் தொடர்ச்சியான விடுதலை உணர்வை வளர்க்க முடியும்; அதை கலை, இலக்கிய கர்த்தாக்களான உங்களால் செய்ய முடியும்."

**தலைவரை நேரடியாக சந்தித்த ஓர் இலக்கிய கர்த்தாவின் உள்ளத்து வெளிப்பாடு....**

ஒரு போராட்ட வீரன், கட்டுப்பாடான ஒரு விடுதலை இயக்கத் தலைவன், துணிச்சல் மிக்க ஓர் விடுதலை இராணுவத்தின் தளபதி- என்ற விதத்தில் அவரைக் கற்பனை செய்தபோது ஓர் பயம் கலந்த மரியாதை அவரிடம் எல்லோருக்கும் ஏற்பட்டது. ஒரு சிறந்த வாசகனாக, இலக்கியவாதியாக, விமர்சகனாக, ஆய்வாளனாக எல்லாம் அவரைச் சந்திப்போம் என்று நான் உட்பட, பலரும் கற்பனை செய்துகூடப் பார்க்கவில்லை.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



# கேள்வி - பதில்

திரு. கிட்டு

* **மீண்டும் ஸ்ரீலங்கா அரசுடனான பேச்சுவார்த்தைச் சூழ்நிலை ஏற்பட்டால், அல்லது ஏற்படுத்தப்பட்டால் விடுதலைப் புலிகளின் அணுகுமுறை எவ்வாறு அமையும் ?**

- தாஸ், சென்னை.-

ஸ்ரீலங்கா அரசுடன் மீண்டும் விடுதலைப் புலிகள் பேசும்போது நிட்சயமாக தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை வலியுறுத்தியும், அதனை அடிப்படையாகக்கொண்ட சில அம்சங்களையும் முன்வைப்பார்கள். தமிழ் மக்களின் இனப்பிரச்சனை தீர்க்கப்படுவதற்கு சில முக்கிய விடயங்கள் தீர்க்கமாக முன்வைக்கப்பட வேண்டியவை.

1) தமிழ் மக்களின் நிகழ்கால, எதிர்காலப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக தமிழ் இராணுவம் உருவாக்கப்படல் வேண்டும்.

2) வடகிழக்குப் பகுதியானது தமிழ் மக்களின் தாயகம் என்பதை ஸ்ரீலங்கா அங்கீகரிக்க வேண்டும்.

வடகிழக்குப் பகுதியானது தமிழர்களின் தாயகம் என்று முன்வைக்கப்படும் போது அங்கு திட்டமிட்டு செய்யப்பட்ட, செய்யப்படும் சிங்களக் குடியேற்றங்கள் பற்றியும் பிரச்சனை எழுப்பப்படுகின்றது. அப்பிரச்சனையில் இலங்கை சுதந்திரம் அடைந்ததன் பிற்பாடு, தமிழ்ப் பகுதிகளில் குடியேற்றப்பட்ட சிங்கள மக்களின் நிலை குறித்தும் பிரச்சனை எழுகின்றது. இப்பிரச்சனைகள் சரிவரத் தீர்க்கப்பட்டால் தமிழீழத்தில் அமைதி திரும்பக்கூடிய வாய்ப்புகள் ஏற்படத்தான் செய்யும்.

ஒரு சிலர் ஒரு நாட்டில் இரு இராணுவமா, அல்லது பிரிவினையா கேட்கிறீர்கள் என்று எம்மை வினவலாம். மேலும் இது அரசியல் அமைப்பு சட்ட விதிகளில் எப்படிச் சாத்தியமாகும் என்றும் எம்மை வினவலாம்.

உலகில் எந்தவொரு நாட்டிலும் உள்ள அரசியல் அமைப்பை எமது இனப்பிரச்சனைக்கு கொண்டு வந்து ஒப்பிட்டு அதன் மூலம் தீர்வு காண்பது என்பது முடியாத விடயம். எமது பிரச்சனையைத் தீர்ப்பதற்கு, எமது பிரச்சனையைத் தீர்க்கக்கூடிய வகையில் ஓர் அரசியல் அமைப்பு உருவாக்கப்படல் வேண்டும்.

எமது நியாய பூர்வமான கோரிக்கைகளை, அரசியல் அமைப்பைக் காரணம் காட்டி நிராகரிப்பதென்பது ஒரு போலிச்சாட்டு. முதலில் ஸ்ரீலங்கா அரசு தமிழர்களுடைய பிரச்சனையைத் தீர்ப்பதற்கு, எமது உரிமைகளை எந்த அளவில் தரத் தயாராக இருக்கின்றது என்பதுதான் ஆராயப்பட வேண்டிய விடயமே ஒழிய அரசியல் அமைப்பு உருவாக்கம் அல்ல.

நாம் வெறும் சித்தாந்த வாதிகளோ, அல்லது நவீன உலகின் நடைமுறையை விளங்காத பத்தாம் பசலிகளோ அல்லர். தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்த சோவியத்திலே ஏற்படுகின்ற பிளவுகளையும் காண்கின்றோம், ஆராய்ந்து பார்க்கிறோம். தனித்தனி நாடுகளாகவும் உலகில் வல்லரசுகளாகவும் உள்ள நாடுகள் ஐரோப்பிய பொருளாதார சமூகம் என்ற ரீதியில் ஒன்றிணைவதையும் காண்கிறோம். அதையும் ஆராய்ந்துதான் பார்க்கின்றோம். இணைகின்ற நாடுகள் தமது இராணுவத்தைக் கலைக்கவில்லை; தமது தேசியத் தன்மையை இழந்துவிடவில்லை. மாறாக பிரிந்துநின்று ஒன்றுபடுகின்றன. இது நவீன உலகத்தின் நவீன அரசியல் வடிவம். இந்த வடிவம், எமது போராட்டத்தை பிரிவினை என்று கதைப்பவர்களுக்கு பிரிவினை என்பது வேறு, தேசிய உரிமைகள் என்பது வேறு என்பதையும், ஒரு இனத்தின் தேசிய உரிமைகளும் பாதுகாப்பும் உறுதிப்படுத்தப்பட்டாலேயே அதன் பின்னர் ஒன்றுபடுகின்ற விடயத்தைப் பற்றிப் பேசமுடியும் என்பதையும் புரியவேண்டும்.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



*** கைப்பற்றப்பட்ட யாழ்.கோட்டை அன்னியச் சின்னமென அழிக்கப்படுமா? அல்லது எமது எதிர்கால சந்ததிக்கும் அதன் வரலாறு தெரியவேண்டுமென விட்டுவைப்பீர்களா?**

- சுதர்சன், பாரிஸ் 20.-


எமது கடந்தகால சந்ததியினதும், நிகழ்கால சந்ததியினதும் பாதுகாப்பிற்கு குந்தகமாகவும், அச்சுறுத்தலாகவும் இருந்த யாழ்க்கோட்டை நிச்சயமாக தகர்க்கப்பட வேண்டியதே. ஆனால் எம்மைக் காலங்காலமாக அடக்கிவந்த அன்னிய சக்திகளின் பிடியில் இருந்து விடுதலைப் புலிகளின் தியாகத்தால் இக்கோட்டை மீட்கப்பட்டது என்பதை எதிர்காலச் சந்ததி அறிவதற்காகவும், பல காலமாக அடிபணிந்தே வாழ்ந்த எம்மினம் விடுதலைப் புலிகளால் தலை நிமிர்ந்தது என்பதை எதிர்காலச் சந்ததி உணருவதற்காகவும் கோட்டையின் சில பகுதிகள் விட்டுவைக்கப்படும்.

*** தமிழீழத்தில் முஸ்லீம் மக்களது நிலை எப்படி? மலையக மக்களை ஏற்றுக்கொள்வீர்களா?**


- குமார், பாரிஸ் 19.-

தமிழீழத்தில் முஸ்லீம் மக்களின் முழுஉரிமையும் பேணப்படும்; அவர்களது அபிலாசைகள் நிறைவேறும். அவர்களது தனித்துவமான உரிமைகள் குறித்து சென்னையில் முன்பு இணக்கம் காணப்பட்டது. தனி அமைப்பு வேண்டும் என்றும் கேட்கிறார்கள்; அதற்கும் நாம் எதிரானவர்கள் அல்ல. ஆனால் அவர்களில் சிலர் ஸ்ரீலங்காவின் ஏவல் நாய்களாகி எம் மக்களையே கடித்துக் குதறுகையில் அது எமக்கு வேதனையை அளிக்கத்தான் செய்கிறது. தமிழர்களிலேயே பல குழுக்கள் ஸ்ரீலங்காவுடன் சேர்ந்து எமது இனத்திற்கு எதிராக போராடும் போது, முஸ்லீம்களில் ஒரு சிலர் எம்மை எதிர்ப்பது பெரிதாகப்படவில்லை.

மலையக மக்கள் தமிழ்த் தேசிய நீரோட்டத்திற்குள் அடங்குகின்றனர். தமிழீழ மக்களுக்கு இருக்கும் அத்தனை உரிமையும் அவர்களுக்கு இருக்கவேண்டும். தமிழீழம் அமைக்கப்பட்டால் அவர்களைத் தமிழீழத்திற்கு வருமாறு அழைப்போம், தூண்டுவோம். 47 ம் ஆண்டுக்காலத்தின் பின் வடபகுதிக்கு வந்த மக்கள் வாழமுடியாமல் திரும்பிச் சென்ற வரலாறும் எமக்குண்டு. அவர்களைத் திருப்பி அனுப்பிய பெருமையும் எமது தமிழ்மக்களுக்கு உண்டு என்பதையும் நாம் மறந்துவிடமுடியாது.




www.tamileelamarchive.com



அன்னியப் பதிவை,
ஆதிக்கக் கனவை
காத்த இக் கோட்டை
புலிகளின் கைகளில்.

நாட்டிய கம்பத்தில்
ஏற்றிய தமிழ்க் கொடி
ஆனந்தமாய் அங்கு ஆடிச் சிரிக்கும்!

எதிரியின் பாசறை எங்கள் மண்ணிலா?
எழு! நிமிர்! எதிரியைக் குறிவை!
தடங்கல் யாவையும் பொடிப் பொடியாக்கு!
................
எங்கே பகைவன்? கொக்காவில் முகாம் எங்கே?



தமிழீழ ஆவணக் காப்பகம்



# கூர்டிஷ் தேசிய விடுதலைப் போராட்டம்

கூர்து மக்கள் பழைய கலாச்சார நாகரீகத்தை உடையவர்கள். மொழி, வரலாறு, கலாச்சார ரீதியாக அரபு மக்களிடமிருந்து வேறுபட்டவர்கள். ஆனால் பெரும்பாலான மக்கள் இஸ்லாம் மதத்தைச் சேர்ந்தவர்கள். அவர்களது கூர்து மொழி மிகப் பழைமை வாய்ந்தது. ஆயினும் இலத்தீன், அரபு எழுத்து வடிவங்களிலேயே கூர்து மொழி எழுதப் படுகின்றது. கூர்து மக்கள் தமக்கென்று ஒரு சுதந்திர நாடின்றி வாழ்கின்றார்கள். துருக்கி, ஈரான், ஈராக், சிரியா, சோவியத் ருஸ்யா ஆகிய நாடுகளில் தேசிய சுதந்திரம் அற்றுப் பிரிந்து வாழ்கிறார்கள். பெரும் பகுதிக் கூர்து மக்கள் துருக்கி நாட்டில் வாழ்கின்றார்கள். துருக்கியில் வாழும் ஒரு கோடி கூர்து மக்கள் துருக்கிய சனத்தொகையில் 20% ஆகும். ஈராக்கில் 32 இலட்சமும், ஈரானில் 18 இலட்சமுமாக வாழுகின்ற கூர்து மக்களின் மொத்த எண்ணிக்கை 2 கோடியாகும். மத்திய கிழக்கில் நான்காவது பெரிய இனமாக கூர்து மக்கள் கருதப்படுகின்றனர். கூர்து மொழி வீடுகளில் பேசப்பட்ட போதிலும் உத்தியோக மொழியாக அவ்வந்நாட்டு மொழிகளிலேயே அலுவல்கள் நடைபெறுகின்றன. துருக்கியில் கூர்து மொழியின் பயன்பாடே தடைசெய்யப்பட்டுள்ளது.

1 ம் உலகப்போருக்குப் பின்னர் வெற்றியடைந்த நேசநாடுகள் சுவிற்சலாந்தில் லோசான் நகரில் கூடின. அங்கு செய்யப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் மத்திய கிழக்கு நாடுகளின் எல்லைகள் வகுக்கப்பட்டன. கூர்து மக்களின் அபிலாசைகள், தேசியத்தைப் புறக்கணிப்பதாக அவ்வுடன்படிக்கை வரையப்பட்டது. பல்வேறு நாடுகளில் கூர்து மக்களைப் பிரித்து வைத்து பிரிவினையை நிரந்தரமாக நிலைநாட்டியது. இதனைத்தொடர்ந்து ஒவ்வொரு நாடும் கூர்து மக்களின் தேசியத் தன்மையை அழிக்கும் முயற்சியில் மும்முரமாக இறங்கின. அவர்களின் பாரம்பரியப் பிரதேசங்களில் இருந்து கலைக்கப்பட்டு மொழி, கலாச்சாரம் அழிக்கப்பட்டு இனப்படுகொலைகள் காலத்திற்குக் காலம் நடத்தப்பட்டு கூர்து மக்களின் தேசம் அழிக்கப்பட்டு வந்தது.

1925 ம் ஆண்டிலிருந்து கூர்து மக்கள் ஆயுதப்போராட்டத்தை நடத்தி வருகிறார்கள். மலைகள் நிறைந்த கூர்துப் பகுதிகள் கெரில்லாப் போராட்டத்திற்கு மிக வாய்ப்பான களமாக அமைந்தன. கூர்துத்தலைவர் சையத் என்பவர் துருக்கியக் குடியரசிற்கு எதிராக முதலில் போர்க் கொடி தூக்கினார். அப்போது துருக்கிய அரச தலைவராக இருந்த புதிய துருக்கியின் தந்தை என்றழைக்கப்படும் கமால் அற்ரதூர்க்கால் சையத்தும் அவரது ஆதரவாளர்களும் பகிரங்கமாகத் தூக்கிலிடப்பட்டனர். இரண்டாம் உலகப் போர்க் காலத்தில் கூர்து மக்கள் ஈரானில் ஒரு சுதந்திரக் குடியரசு ஒன்றை நிறுவியிருந்தனர். இது மகபாத் குடியரசு என்று அழைக்கப்பட்டது. குறுகிய காலமே இக்குடியரசு நீடித்தது. இரண்டாம் உலகப் போர் முடிவுற்றபின் மீண்டும் ஈரானின் ஆக்கிரமிப்புக்கு உள்ளாகியது.

துருக்கி, ஈரான், ஈராக் ஆகியவற்றில் பல்வேறுபட்ட விடுதலை இயக்கங்கள் தொடர்ச்சியாக அவ்வவ் அரசாங்கங்களுக்கு எதிராக ஆயுதப் போராட்டத்தை முன்னின்று நடத்திக் கொண்டிருக்கின்றன. துருக்கி, ஈராக், ஈரான், சிரியா, ருஸ்யா ஆகிய நாடுகளிலுள்ள கூர்டிஸ் பகுதிகளை இணைத்து கூர்டிஸ்ரான் என்ற சுதந்திர நாட்டை அமைப்பதுதான் அனைத்து இயக்கங்களினதும் இலட்சியமாகும். துருக்கியில் கூர்டிஸ்ரான் தொழிலாளர் அமைப்பு (PKK) கெரில்லாப் போராட்டத்தை நடத்தி வருகின்றது. இவ்வமைப்பு சோசலிசத் தத்துவத்தை தனது சித்தாந்தமாகக் கொண்டுள்ளது. தேசிய விடுதலையும், சோசலிச சமுதாய மாற்றமும் இதன் கொள்கைகளாக உள்ளன. இவ்வியக்கத்தின் தலைவர் ஒஷலன் என்பவராகும். இவ்வமைப்பின் தலைமைப்பீடம் சிரியாவிலிருந்து செயற்படுகின்றது. துருக்கிய நாட்டிலுள்ள கூர்டிஸ் கெரில்லாக்கள் சிரியாவில் பயிற்சி பெறுகிறார்கள். ஏராளமான ஆயுதங்களையும் சிரியா வழங்குகின்றது. ஏனைய பகுதிகள் விடுவிக்கப்பட்டால் தமது நாட்டிலுள்ள பகுதிகளை விட்டுக் கொடுப்பதாக சிரியாவும், ருஸ்யாவும் கூறியுள்ளன. சிரியாவிற்கு ருஸ்யா வழங்கும் ஆயுதங்கள் கூர்டிஸ் கெரில்லாக்களைச் சென்றடைவது குறிப்பிடத்தக்கது. துருக்கி வாழ் கூர்து மக்களின் போராட்டம் தீவிரமடைந்து வருகின்றது. கூர்து மக்கள் வெற்றி பெறும் கனவுடன் முன்னேறுகின்றார்கள். கூர்து மக்களிடையே துரோகிகளுக்கும் பஞ்சமில்லை. துருக்கியில் இராணுவம் 25000 பேர் கொண்ட தொண்டர் படையொன்றை உருவாக்கியது. இது கூர்டிஸ் துரோகிகளைக் கொண்ட கூலிப்படை. கெரில்லாக்களின் களை எடுப்பினாலும் பிரச்சாரத்தினாலும் தொண்டர் படையின் எண்ணிக்கை வெகுவாகக் குறைந்துள்ளது.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



பத்து இலட்சம் படைவீரர் கொண்ட துருக்கிய இராணுவத்தில் 5 இலட்சம் இராணுவத்தினர் கூர்டிஸ் கெரில்லாக்களை அடக்குவதற்காக ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

ஈராக்கில் கூர்டிஸ் ஜனநாயகக் கட்சி என்ற அமைப்பு போராட்டத்தை நடத்துகின்றது. இவ்வமைப்பின் தலைவர் மசூட் பர்சானி என்பவராகும். ஈராக்கில் நடைபெறும் போராட்டத்திற்கு ஈரான், லிபியா ஆகிய நாடுகள் உதவுகின்றன. ஈராக்கிற்கு பெரும் வருமானத்தைத் தருகின்ற எண்ணை வயல்கள் கூர்டிஸ் பகுதியான கிர்குக் என்னும் இடத்தில் உள்ளது எண்ணைப் பகுதிகளை விட்டுவிட ஆக்கிரமிப்பு நாடு தயாராக இல்லை. கூர்டிஸ் பகுதிகளில் உள்ள எண்ணை வளமும் கூர்து மக்களின் விடுதலைக்குத் தடையாக உள்ளது. சில ஆண்டுகளுக்கு முன்னர் ஈராக் விமானங்கள் ஈராக்கிய கூர்டிஸ் பகுதிகளில் இரசாயனக் குண்டுகளை வீசி குழந்தைகள், பெண்கள் உட்பட பல்லாயிரக்கணக்கானோரை கொன்றொழித்துப் படுகொலை புரிந்தது குறிப்பிடத்தக்கது. இப்படி கொடூரமான செயலால் ஈராக் உலக மக்களின் கண்டனத்திற்கு உள்ளாகியது. இரசாயன ஆயுத உற்பத்திக்கு சில மேற்கு நாடுகளே ஈராக்கிற்கு உதவின என்பதும் குறிப்பிடத்தக்கது.

வெவ்வேறு நாடுகளில் போராடிக் கொண்டிருக்கும் இயக்கங்கள் மொழியடிப்படையில் வேறுபடுகின்றன. சித்தாந்த அடிப்படையில் முரண்பட்டு நிற்கின்றன. தேசிய விடுதலை, போராட்ட இலட்சியமாக இருந்த போதிலும் போராட்டம் ஒரு உறுதியான தலைமையின் கீழ் நடைபெறவில்லை. ஒரேயொரு பிரமாண்டமான தேசிய விடுதலை சக்தியாகப் பரிணமிக்காததால் அவ்வந் நாடுகள் கூர்டிஸ் இயக்கங்களை தமது சொந்த நலனுக்காகப் பயன்படுத்துகின்றன. ஈரான், ஈராக் சண்டையின் போது ஈராக்கிலுள்ள கூர்டிஸ் அமைப்புக்களை ஈரானும், ஈரானிலுள்ள கூர்டிஸ் அமைப்புக்களை ஈராக்கும் பயன்படுத்தின. ஈராக்கிய கூர்டிஸ் அமைப்புக்கள் ஈரானிற்கும் ஈரானிய கூர்டிஸ் அமைப்புக்கள் ஈராக்கிற்கும் உதவின. ஈராக்கில் இயங்குகின்ற கூர்டிஸ் ஜனநாயகக் கட்சியும், துருக்கியில் இயங்குகின்ற கூர்டிஸ்ரான் தொழிலாளர் அமைப்பும் நெருங்கிய கூட்டுச் செயல்ப்பாட்டுடன் விளங்குகின்றன. போராட்ட இலட்சியத்தை அடைவதிலுள்ள பாதை மிகக் கடுமையானதாகவும், பாரிய சோதனைகள் நிறைந்ததாகவும் இருந்த போதிலும் கூர்து மக்களும் அவர்களது இயக்கங்களும் அயராத உழைப்புடனும் தளராத நம்பிக்கையுடனும் செயற்படுகின்றனர். அவர்கள் வெற்றிபெறுவது நிச்சயம்.

அண்மையில் ஏற்பட்ட வளைகுடா பிரச்சனையில், ஈராக்கில் உள்ள கூர்து மக்களை, தனது எல்லைப்புறங்களைப் பாதுகாக்கும் மனித கேடயங்களாகப் பயன்படுத்த ஈராக் எண்ணுகிறது. அமெரிக்க ஆதரவுடன் ஈராக்கை வென்று ஈராக்கிய கூர்டிஸ் பகுதிகளை தனது எல்லையுடன் இணைக்கத் துருக்கி விரும்புகிறது. வளைகுடாவில் யுத்தம் ஏற்பட்டால், அதன் முடிவில் ஏற்படும் தீர்வின் போது தங்கள் சுதந்திரத்தையும் நிலைநாட்டலாம் என்று எண்ணுகின்றனர் கூர்து மக்கள். துருக்கியோடு ஈராக்கின் கூர்துப் பகுதிகள் இணைக்கப்படும் நிலை ஏற்பட்டால் ஒன்றிணைக்கப்பட்ட பரந்த கூர்துப் பகுதியில் தமது போராட்டத்தை தொடர்ந்து நடத்த கூர்து மக்கள் உறுதிபூண்டுள்ளனர்.

---

## கேள்வி பதில் பகுதி

'எரிமலை' இதழில் வெளிவரும் கேள்வி பதில் பகுதிக்கு உங்கள் சந்தேகங்களை கேள்விகளாக்கி மாதத்தின் இறுதிப் பகுதிக்குமுன் அனுப்பி வைக்கவும்.

உங்கள் கேள்விகளுக்கான பதிலை தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் முக்கிய பிரமுகர்கள் வழங்குகின்றனர்.


ஆசிரியர்குழு

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



# மேஜர் செல்வராசா



ஒரு வீரனின் அனுபவம்.


செல்வராசா மாஸ்ரரோடு நெருங்கிப் பழகுவதற்கு எனக்குச் சில சந்தர்ப்பங்கள் கிடைத்திருந்தன. 84 ம் ஆண்டு இருவரும் ஒரே பயிற்சி முகாமில்தான் கெரில்லாப் பயிற்சிகளைப் பெற்றோம். தமிழ் நாட்டில் நாம் பயிற்சிபெற்ற கும்பாரப்பிட்டிக் கிராமம் இன்று புலிக்கிராமம் என்று அழைக்கப்படுகிறது.

கடலோடிக் கறுத்துப்போன தேகம்; அதனுள்ளே அன்பான ஒரு இதயம். அகன்ற எக்குப் போன்ற கைகள். ஒவ்வொரு செயலையும் மிக அவதானமாகவும், உறுதியாகவும் செய்யும் பக்குவம். மிக மெதுவான பேச்சு. கடுமையான பயிற்சிகளை மிக எளிதாகவும், முன்னுதாரணமாகவும் செய்து காட்டும் திறன், இவைதவிர சிலம்படியில் ஓர் ஆசிரியருக்குரிய தகுதி; இவையே அவரை மரியாதைக்குரிய மாஸ்ரராக அழைக்கும்படி செய்தன.

கூறிய பதில் இதுதான்." தற்போதைக்கு மிகவும் பாதுகாப்பான இடம் இதுதான்; இவ்வளவு நெருக்கமாக நாம் இருப்போமென்று கனவிலும் இந்தியன் யோசித்துப் பார்க்கமாட்டான். அந்த அளவிற்கு இது பாதுகாப்பான இடம்."

யாழ் குடாநாட்டில் இருந்த விடுதலைப்புலிகளின் சகல படையணிகளும் ஆரம்பத்தில் 40, 50 பேர் கொண்ட குழுக்களாக இரகசியமாகவே செயல்ப்பட்டன. செல்வராசா மாஸ்ரர் தனது உத்தியை மாற்றிக் கொண்டு வெளியரங்கமாய் செயல்ப்பட ஆரம்பித்தார். "இந்த இடத்தில் எனது படையணி இருக்கிறது ; இயலுமானால் வந்து தாக்கு." என்று இந்திய இராணுவத்துக்கு சவால் விடுவதுபோலிருந்தது அவர் செய்கை. உடுவிலில் அவர் நிலை கொண்டிருந்த போது, அவரது வீரர்கள் வெளிப்படையாகவே ஆயு

ஆறுமாதப் பயிற்சி - மிகக் கடுமையாகவும், சாகசமாகவும் சந்தோசமாகவும் கழிந்தது. சகல முகாம்களுக்கும் பொறுப்பாளராக இருந்த பொன்னம்மானின் அன்பின் நிழலிலும், எமது முகாம் பொறுப்பாளரான புலேந்திரனின் கண்டிப்பிலும், பயிற்சியாளர் ராதாவின் உற்சாகமான செயற்பாடுகளிலும் ஏராளமான விடுதலை வீரர்கள் அங்கு உருவாகிக் கொண்டிருந்தார்கள்.



செல்வராசா மாஸ்டர்

தங்களுடன் திரிந்தனர். சந்தி ஒன்றில் - வீதிவழிகாட்டும் மேடையொன்றில் இலகு இயந்திரத் துப்பாக்கியைப் பொருத்தி, சென்றிகளை அமைத்து வீதியில் போவோர் வருவோர் இவர்களது இருப்பிடத்தைக் காணக்கூடியவாறு அட்டகாசமாகவே செயற்பட்டனர். இதில் பெரும் ஆபத்து இருந்தது. இந்திய இராணுவ வாகனங்களிலும், தனியார் வாகனங்களி

1987 ஒக்ரோபர் 10 ம் திகதி இந்திய இராணுவத்துடனான எமது யுத்தம் ஆரம்பமாகிவிட்டது. யாழ் நகருக்குள் இந்தியப்படை நுழைந்துவிட்டபின், கொக்குவிலில் செல்வராசா மாஸ்ரரை ஒருநாள் சந்தித்தேன். பல்கலைக் கழகத்தில் முகாமிட்டிருந்த இராணுவத்தினருக்கு 500 யார் அளவிலான தூரத்திலேயே செல்வராசா மாஸ்ரரின் அணி நிலைகொண்டிருந்த வீடும் இருந்தது. இந்த நெருக்கம் குறித்து நான் ஆச்சரியத்துடன் கேட்டபோது அவர் சாதாரணமாகக்

லும் துரோகிகளும் பவனிவந்து காட்டிக்கொடுத்துக் கொண்டிருந்த நேரம். இந்திய இராணுவத்தின் படைபலத்தினால், ஒரு சுற்றிவளைப்பு 3, 4 சுற்றுக்களைக் கொண்டதாக இருக்கும். தப்புவது கடினம். வீடுகளை அக்குவேறு, ஆணிவேறாக பிரித்துச் சோதனை இடுவார்கள். எமது குழுக்கள் சில இச்சுற்றிவளைப்புகளில் பல வீரர்களை இழந்துள்ளது.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



இராணுவ பயிற்சி நூல்களில் கற்ற உத்திகளை அச்சுப் பிசகாமல் இந்திய இராணுவத்தினர் கடைப்பிடித்தனர். விடுதலைப் புலிகளின் இருப்பிடத்தை நெருங்கிவந்து தாக்கும் போது - ஆரம்பத்தாக்குதலின் பின்னர் - விலகிச் செல்வதுபோல் பாசாங்கு செய்து அங்கேயே நிலையெடுத்துப் படுத்து விடுவார்கள். அதேவேளை தமது இன்னொரு அணி பின்புறமாக எம்மைத் தாக்குமாறு வோக்கிரோக்கியில் அறிவிப்பு செய்து விடுவார்கள். இதனால் கிடுக்கிப்பிடி போன்ற எதிரியின் தாக்குதல் வலயத்தினுள் நாம் மாட்டுப்பட நேரிடும். இத்தகைய வியூகங்களை உடைத்து சாதனைகளை நிலைநாட்டியவர்கள்தான் மாஸ்ரர் செல்வராசாவும் அவரது அணியினரும். அவரது அணியில் - சரிசமனாக பெண்புலிகளும் இருந்தார்கள்.

நாம் அப்போது அளவெட்டியில் மரவெள்ளித் தோட்டத்துள் தங்கியிருந்தோம். இந்திய இராணுவ அதிகாரி மேஜர் பரமேஸ்வரன் கொல்லப்பட்டது குறித்து மகிழ்ச்சி அடைந்தோம். சில நாட்கள் கழித்து செல்வராசா மாஸ்ரர் எமது இருப்பிடத்திற்கு வந்தார். அவரைச்சுற்றி நாம் அனைவரும் இருக்க அவர் அச்சண்டையை வர்ணிக்கத் தொடங்கினார். மேஜர் பரமேஸ்வரனை தான் சுட்ட சம்பவத்தை அவர் கூறுவதை வியப்புடன் கேட்டுக் கொண்டிருந்தோம்.

"விடிகிற நேரம் தற்செயலாக வேலிக்கு வெளியால் எட்டிப் பார்த்தேன். எனக்கு நேரே சில இராணுவத்தினர் நிற்பது தெரிந்தது. தலையை உள்ளுக்குள் இழுத்துக் கொண்டேன். கிடுகு இடுக்குகளினூடு பார்த்துக் கொண்டிருந்தேன். 15, 16, 17,.. என்று எண்ணிக் கொண்டேன். எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டிருந்தது. விஷயம் எனக்கு புரிந்து விட்டது. வீட்டைச் சுற்றிவளைக்கிறார்கள். நாம் முந்திவிட வேண்டும் என்று நினைத்துக்கொண்டேன். நான் உடனே சுடத் தொடங்கினேன். மற்றப் பொடியங்களும் எழும்பிச் சுடத்தொடங்கினாங்கள். அவங்களில 7, 8 பேர் விழுந்து போனாங்கள். இருந்தாப்போல ஜீப் ஒன்று எனக்குச் சில யார்கள் முன்னுக்கு சடக்கென பிரேக் அடித்து நின்றது. அதிலிருந்து பலர் குதிப்பதையும் என்னால் காணக்கூடியதாகவும் இருந்தது. சில இராணுவத்தினர் குண்டுபட்டு விழுந்தனர். நேருக்கு நேராக நானும் அவரும் நின்றோம். அப்போ எனக்குத் தெரியாது இவர்தான் மேஜர் பரமேஸ்வரன் என்று. ஆனால் ஓர் அதிகாரி என்பது தெரிந்தது. ஒருகணம் எங்கள் இரண்டுபேருடைய கண்களும் தீர்க்கமாகச் சந்தித்துக் கொண்டன. அவருடைய கைகள் துப்பாக்கியை குறிபார்க்க உயர்ந்தன. அதற்குள் எனது துப்பாக்கி எழுந்து குறிபார்த்துச் சுடத் தொடங்கிவிட்டது. எனது கைகளின் இறுக்கத்தில் துப்பாக்கி உறுதியாக இருந்ததை உணரமுடிந்தது. அவர் அப்படியே சுருண்டு விழுந்தார். எல்லாம் மிகவிரைவில் நடந்துமுடிந்துவிட்டது. அவர்கள் பின்னோக்கி ஓடும்போது நாங்கள் துரத்திச் சென்று தாக்கினோம். பின்னர்தான் தெரிந்து கொண்டேன் - அவ்வதிகாரி மேஜர் பரமேஸ்வரன் என்றும், அப்பகுதி இராணுவப் பொறுப்பாளர் என்றும்." இவ்வாறு செல்வராசா மாஸ்ரர் சொல்லி முடித்தார்.

நான் வன்னிக் காடுகளுக்குத் திரும்பமுன்னர் மீண்டும் ஒருமுறை செல்வராசா மாஸ்ரரை பண்டத்தரிப்பில் சந்தித்தேன். அங்கு அவரைக் கண்டபோது மிகவும் ஆச்சரியப்பட்டுப்போனேன். முன்னர் நடந்த வேறொரு சண்டையின்போது மிகக் கடுமையான காயத்திற்கு உள்ளானதாக அறிந்திருந்தேன். தொடையைக் கிழித்துக்கொண்டு குண்டு போனதாயும், இரத்தம் மிகவும் போய் உயிருக்கு ஆபத்து என்றும் அறிந்திருந்தேன். அன்றைய நிலையில் சிறிய காயத்திற்குள்ளான பலர் வைத்திய வசதி நேரத்திற்குக் கிடைக்காது இறந்துபோன சம்பவங்கள் நிறைய நடந்தன. இந்தியாவிற்கு அவசரமாக அவரைக் கொண்டுபோனதாகவும் அறிந்தேன். ஆனால் ஒரு மாதத்துள் 88 மார்ச் மாதம் அளவில் அவரை மீண்டும் களத்தில் கண்டபோது என்னால் நம்ப முடியவில்லை. அங்கு சும்மாயிருக்கப் பிடிக்கவில்லை என்றும், சண்டையிடத் திரும்பிவந்துவிட்டதாயும் கூறி இன்னும் ஆறாத தொடையின் காயத்தை எனக்குக் காட்டினார்.


இப்போது அந்த சுத்த வீரன் எங்கே? பலாலியில் இராணுவம் முகாமைவிட்டு வெளியேற முற்பட்ட போது மக்களின் கவசமாய் தன்னை ஆக்கிக் கொண்டு போரிட்ட மேஜர் செல்வராசா களத்தில் வீழ்ந்தார். சிறந்த படைத்தளபதி ஒருவரை இழந்த ஏக்கத்தை என்னால் அடக்கமுடியவில்லை. எப்போதும் அவர் கண்களில் ஒரு தீட்சண்யமான ஒளி காணப்படும். அது விடுதலை பற்றிய கனவினால் எழுந்த ஒளியாகவே நான் கருதினேன். அந்த ஒளி அவரது சாவினால் அடங்கியதாக இல்லை: பரவுவதாகவே உணர்கிறேன்.

--- தோழன் ---

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்





இந்திய அமைதிப்படையுடனான மோதலில் விடுதலைப் புலிகள் தமது திறமைவாய்ந்த சண்டைக்காரர்களை இழந்துள்ளனர். விடுதலைப் புலிகளில் தற்போது எஞ்சி இருப்பது சிறுவர்களையும், சிறுமியர்களையும் கொண்ட ஒரு குழந்தைப்படைப்பிரிவே. அவர்கள் எனது படை வீரர்களைக் கண்டதும் சிறுநீர் கழித்து தமது உள்ளாடைகளை நனைத்துக் கொள்வார் கள்.

ரஞ்சன் விஜயரெட்னா - INDIA TODAY பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் இருந்து.
- INDIA TODAY, 15/07/90

## மாங்குளம்; ஒரு மரணஅடி!

சிறீலங்காவுடனான தமிழீழ யுத்தம் மீண்டும் ஆரம்பித்ததில் ஆரம்பித்த மாங்குளம் இராணுவ முகாம் முற்றுகை 24.11.1990 அன்று அதிகாலை 3.15 மணியளவில் முற்றுப்பெற்றது. 22.11.1990 அன்று நள்ளிரவு முகாம் மீதான இறுதிக்கட்டத் தாக்குதலை விடுதலைப்புலிகள் முடுக்கிவிட்டனர். தற்கொலைப் படைப்பிரிவைச் சேர்ந்த கரும்புலிகள் இத்தாக்குதலில் முன்னணி வகுத்தார்கள். மிக உக்ரமான இருநாள் யுத்தத்தின் பின் மாங்குளம் முகாம் விடுதலைப்புலிகளின் கைகளில் வீழ்ந்தது. இம்முகாம் சிங்கள இராணுவத்தினரின் குறிப்பிட்டுச்சொல்லக்கூடிய பெரிய முகாம்களில் ஒன்றாகும். நூற்றுக் கணக்கான இராணுவத்தினர் இத்தாக்குதலின்போது அழிக்கப்பட்டனர். ஏனையோர் காடுகளுக்குள் ஓடித் தப்பிக்கும் முயற்சியில் ஈடுபட்டனர். முகாம் கைப்பற்றப்பட்ட பின்னரும் முகாமை அண்டியுள்ள காட்டுப் பிரதேசங்களில் சிங்கள இராணுவத்தைத் தேடிஅழிக்கும் நடவடிக்கையை விடுதலைப் புலிகள் மேற்கொண்டனர். இத் தேடியழிப்பு நடவடிக்கை ஒரு வாரமாகத் தொடர்ந்தது. இதன்போதும் பல இராணுவத்தினர் அழிக்கப்பட்டனர். ஏராளமான நவீன போர்க் கருவிகள், பல கவச வாகனங்கள், ஜீப்புகள், றக்குகள் என்பனவும் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

இத் தாக்குதல் நடைபெற்ற இருதினங்களும் சிங்கள விமானப்படை, தாக்குதலை முறியடிக்க கடுமையான குண்டு வீச்சுகளை மேற்கொண்டது. எனினும் விடுதலைப் புலிகளின் விமான எதிர்ப்புத் துப்பாக்கிகள் ஆக்ரோஷமான எதிர்த் தாக்குதலை மேற்கொண்டன. ஒரு கெலிகொட்டர் கடும் சேதத்திற்கு உள்ளானது. புகை கக்கிக் கொண்டு சென்ற அந்தக் கெலிகொப்டர் வவுனியாவில் அவசர அவசரமாக தரையிறக்கப்பட்டது. விமானப்படை விடுதலைப் புலிகளின் தாக்குதலை எதிர்கொள்ளமுடியாது பின்வாங்கியது.

மாங்குள முகாம் வெற்றியானது விடுதலைப் புலிகளின் மிகப் பெரிய இராணுவ வெற்றியாகக் கருதப்படுகிறது. தமிழர்களின் போராட்ட வரலாற்றில் , மிகப்பெரிய சிங்கள இராணுவ முகாம் ஒன்று முற்றுகையிடப்பட்டு பின் தாக்கி அழிக்கப்பட்டது இதுவே முதற்தடவையாகும் என சர்வதேச இராணுவ ஆய்வாளர்கள் கருத்து வெளியிட்டுள் ளனர்.

இந்த மகத்துவமான தமிழர் வரலாற்றை எழுத பதினைந்து பெண் போராளிகளும், நாற்பத்திஏழு ஆண்போராளிக ளும் களத்தில் தம்மை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டனர். இத்தாக்குதலின்போது தற்கொலைப் படைப்பி ரிவைச் சேர்ந்த கரும்புலி லெப்.கேணல் போர்க் அவர்களும் வீரமரணத்தைத் தழுவிக்கொண்டார்.

சிறீலங்காவின் பொறுப்புள்ள அமைச்சர் ரஞ்சன் விஜயரெட்னா கூறுவதுபோல் விடுதலைப் புலிகளின் உள்ளாடை கள் நனையவில்லை. சிங்களப்படையினருக்குத்தான் அமைச்சர் குறிப்பிட்டதுபோல் ஏதாவது நிகழ்ந்திருக்கக் கூடும்.

கொண்டச்சி, கொக்காவில், கோட்டை, மாங்குளம் என நீண்டுகொண்டு செல்லும் தமிழர்களின் வீரவரலாற்றை எழுதுபவர்கள் ரஞ்சன் குறிப்பிட்ட அதே குழந்தைப் படையினர்தான்.

விடுதலைப் புலிகளைக் கண்ட மாத்திரத்திலே கிலிகொள்வதும், தாக்குதல்களின்போது தப்பினோம் பிழைத்தோம் என தலைதெறிக்க ஓடித்தப்புவதும், சரணடைவதும் சாதாரண நிகழ்வுகள். சிங்கள இனவாதத்திற்கு பேரிடியைக் கொடுத்துக் கொண்டிருக்கும் தமிழ்த் தேசியப் படையான விடுதலைப் புலிகளை , குழந்தைப் படைப்பிரிவென்றோ அல்லது முதியோர் படைப்பிரிவென்றோ எப்படி வேண்டுமானாலும் ரஞ்சன் அழைத்துக்கொள்ளட்டும்.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



# முகாம் வீழ்ச்சி தந்த அதிர்ச்சி

மாங்குளம் இராணுவ முகாம்மீது விடுதலைப் புலிகள் கடும் தாக்குதல் நடத்தி அதைத் தகர்த்து தீ வைத்தனர்.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் - ஜெனரல் சிறில் ரணதுங்கா.
- தினபதி நவம்பர் 27 -

மாங்குள இராணுவ முகாம்மீது புலிகள் நடத்திய தாக்குதல்களினால் பல இராணுவ வீரர்கள் கொல்லப்பட்டுள்ளனர். பலர் காட்டிற்குள் தப்பி ஓடியுமுள்ளனர்.

பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் - ரஞ்சன் விஜயரெட்னா
- தினபதி நவம்பர் 27 -

மாங்குளம் முகாமில் இருந்த பெரும் எண்ணிக்கையிலான இராணுவ வீரர்கள் கொல்லப்பட்டிருக்கலாம் என இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் ஹமில்டன் வனசிங்கே தெரிவித்துள்ளார்.
- தினபதி நவம்பர் 27 -

இலங்கை அரசுக்கும், தமிழீழப் போராளிகளுக்கும் இடையிலான போராட்ட வரலாற்றில் இவ்வளவு பெரும் எண்ணிக்கையில் அரசாங்கப் படையினர் உயிர் இழந்துள்ளது இதுவே முதல்முறை என்று அகில இந்திய வானொலி அறிவித்துள்ளது. 250 க்கும் அதிகமான இராணுவ வீரர்கள் இதில் கொல்லப்பட்டிருப்பதாக மேலும் அவ்வானொலி அறிவித்துள்ளது.
- தினபதி நவம்பர் 27 -

தமிழீழ விடுதலைப் புலிகளுடனான போரில் வெற்றியைக் காண நாம் இன்னமும் வெகுதூரம் செல்ல வேண்டியுள்ளது. இதனையே மாங்குளம் எமக்குப் புகட்டி இருக்கிறது.
இறந்த வீரர்களின் எண்ணிக்கை எமது அதிகாரிகளால் கூறமுடியாதிருக்கும்போது இறந்த பயங்கரவாதிகளின் எண்ணிக்கையை எவ்வாறு அறிந்துகொள்ள முடியும். தவறான நம்பிக்கை கொண்டிருப்பதை விடுத்து , யதார்த்தபூர்வமான நிலையை நோக்கவேண்டும்.

பாராளுமன்றத்தில் - சிறீமாவோ பண்டாரநாயக்கா.
- வீரகேசரி மார்கழி 02 -

போரிலே இராணுவத்தினருக்கு தோல்வி ஏற்படுகின்ற சந்தர்ப்பங்களில் மாத்திரம் சபையில் எதிர்க்கட்சித்தலைவி அறிக்கை விடுகின்றார்; இதை விடுத்து, இராணுவத்தினர் வெற்றிகண்டபோதும் அறிக்கை விட்டிருக்கவேண்டும்.

ரஞ்சன் விஜயரெட்னா.
- வீரகேசரி மார்கழி 02 -

500 இராணுவவீரர்களைக் கொண்ட மாங்குளம் இராணுவ முகாமிற்கு என்ன நடந்தது என உண்மை நிலையை அரசு அறிவிக்க வேண்டும்.
மாங்குளம் முகாமைத் தாக்கிய புலிகள் அங்கிருந்து எல்லா ஆயுதங்களையும் அபகரித்துச் சென்றுள்ளனர்.
இராணுவம் புலிகளுடன் போராட முடியாது என ஆயுதங்களைக் கீழே வைத்துவிட்டு வந்துவிட்டால் என்ன செய்யப் போகிறீர்கள்.
நீங்கள் போடும் அவசரகாலச் சட்டங்கள் எதுவும் அங்கு சரிவராது.
பொய்ப் பிரச்சாரங்களை தவிர்த்து உண்மை நிலையை வெளிப்படையாகத் தெரிவியுங்கள்.

பாராளுமன்ற உறுப்பினர் - M.K.D.S. குணவர்த்தனா.
- தினபதி மார்கழி 03 -

இலங்கையின் வடக்கு - கிழக்கில் பெரும்பகுதி புலிகளின் கட்டுப்பாட்டில்தான் இருக்கிறது. பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் இதனை மறைப்பதற்காகவே சில பகுதிகளுக்கு சென்று வருகிறார்போல் தெரிகிறது. எப்போதும் மக்களுக்கு உண்மையைத் தெரிவியுங்கள்; பொய்களைக் கூறாதீர்கள்.

பாராளுமன்ற உறுப்பினர் - லக்ஸ்மன் ஜயக்கொடி.
- தினபதி மார்கழி 05 -

மாங்குளம் தாக்குதல் புலிகளுக்கு வெற்றியல்ல; பாரிய இழப்பைத் தவிர்க்க பின்வாங்குவது, மீண்டும் தாக்குதல்களுக்காக முன்னேறுவது என்பது இராணுவத் தந்திரமே தவிர தோல்வியல்ல. மாங்குளம் தாக்குதல் விடுதலைப் புலிகளின் பலத்தைக் காட்டவில்லை.

E.P.D.P தலைவர் டக்ளஸ் தேவானந்தா.
- தினகரன் மார்கழி 09 -

விடுதலைப் புலிகளின் தாக்குதலை அடுத்து இராணுவம் தாமாக விலகிக்கொண்டது.

- சங்கர் ராஜி தலைமையிலான வெளிநாட்டு EROS உதிரிகள். -

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

## ஒரு புதிய புலர்வுக்காய் ......

மீண்டும் சுழலும்
தர்மச் சக்கரம்
எங்கள் தாயக காலடி மண்ணை
உழுது செல்லும்.
கிழக்குத் திசையில்
மழை பார்த்து விதை விதைத்த
மருத நிலங்களில்
விதைகளுடன் சேர்த்து
வேர்களையும் புரட்டிவிட்டுப் போகும்
புயற்காற்று
எங்கள் பகல்களையும் இருட்டாக்கும்.

மனிதர் நாங்கள் என்பதை மறந்து
மரங்களுக்குக் கீழே பாய்களை விரித்து
மண்ணில் குழிதோண்டி உடல்களை நுழைத்து
வாழத் தொடங்குவோம்
ஒரு புழுவிலும் கீழாய்.

அரபுத் தாயகத்தில் வாழ்நிலம் இழந்த
பாலஸ்தீனத்தின் கண்ணீர்த் துளிகள்
ஈழமண்ணின் கிழக்குக் கரையிலும்
பட்டுத் தெறிக்கும்.

கல்லாற்று வாவியில்
முன்னிரவில் கேட்ட
பாடும் மீன்களின் ராகம் கேட்காது.
இன்னொரு கடலுக்கு இடம்பெயர்ந்திருக்கும்
அகதியாய் அவையும்

இனவெறிச் சேற்றில்
சிக்கிச் சுழலும்
புத்தனின் தர்மச் சக்கரம்.

சாப்ரா, ஷாடில்லா
அகதிமுகாம்களில்
மனிதக் கழுகுகளால் குதறப்பட்ட
பாலஸ்தீன பிணங்களின் வாடை
கிழக்குக் கரையில் தென்படும் முகங்களின்
சுவாசப் படிக்கட்டுகளை
வந்து நிரப்பும்.

மொகஞ்சதாரோவில் முகிழ்த்த
மனித நாகரீகம்
கரைகளில் ஒதுங்கும்
உயிரற்ற ஒரு பிணமாக.

பிணங்களில் தடுக்கி
வேகமாய்ச் சுழலும் தர்மச்சக்கரம்
ஒருநாள் தனது
அச்சை முறிக்கும்.

எந்நாளும்
சூரியன் உதிக்கும் கிழக்கின் திசைகளில்
இருள் விலகி ஒளி புலரும்
ஒரு வாழ்வுக்காய்
நாங்கள் காத்திருக்கிறோம்.
புயற்காற்றில் கிளை ஒடிந்த மரங்கள்
ஒரு வசந்தப் பொழுதுக்காய்
காத்திருத்தல் போல
நாங்கள் காத்திருக்கிறோம்!



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

அப்புவும் ஆச்சியும் தோன்றி மகிழ்ந்த பூமி இப்பூமியாம்!
சந்தமார் கவி பாடித்திரிந்ததும்,
சபைகள் யாவுமே தமிழில் திளைத்ததும்,
விந்தை ஆயிரம் செய்து உயர்ந்ததும்,
வேறிடத்திலா ? இல்லை இப்பூமியில் !

தென்றல் மேனியைத் தீண்டி மகிழ்ந்ததும்,
தேக வியர்வை சொரிந்து விளைந்ததும்,
கன்று போல நாம் ஓடித்திரிந்ததும்,
காதல் செய்து உருகிக்கிடந்ததும்,
நன்று நன்றென விடியும் வரையிலும்
நாலு கோவில் திருவிழா பார்த்ததும்
நின்று போனது.

எங்களின் தாயகம் நெருப்பு நீரிலே நீந்திக்கிடக்குது.

நெல் விளைந்து சரிந்து கிடந்ததும்,
நீள நின்று நாம் புதிர்எடுத்ததும்,
புல் வெளிகளில் மாடுகள் மேய்த்ததும்,
புதுப் பொலிவுடன் பள்ளிக்குப் போனதும்,
வல்லை வெளியினைத் தாண்டி
மகிழ்வுடன் வண்டிலேறிச் சந்நதி சென்றதும்,
செல் விழுந்திடாக் காலப்பகுதியில்
செய்து மகிழ்ந்த பூமி இப்பூமியாம்!

- புதுவை இரத்தினதுரை -

www.tamileelamarchive.com